# விடுதலைப்புலிகள்

குரல்: 33 | ஐப்பசி - 1992 | அன்பளிப்பு: ரூபா 5-00


# சிறீலங்கா படைத்தலைமையின் புதிய போர்முறைத்திட்டம்

## தென்தமிழீழத்தைப் பிரித்து சிங்களமயமாக்கல். வடக்கில் வான் தாக்குதலைத் தீவிரமாக்கல்.

அண்மைக்காலத்தில், சிங்களப்படைகள் பயன்படுத்தி வந்த இராணுவ தந்திரோபாயங்கள் தோல்விகண்டுவிட்டதை சிங்கள அரசு உணர்ந்து கொண்டுள்ளது.

கடந்த சில மாதங்களில் சிங்களப்படை சந்தித்த பாரிய உயிரிழப்புக்களும் பெருந்தொகையான ஆயுத-தளபாட இழப்புகளும் சிறீலங்கா அரசிற்கு இதை உணர்த்தியுள்ளன.

இந்த நிலையில் இராணுவத்தோல்விகளைத் தடுத்து நிறுத்தும் எண்ணத்துடன், சிறீலங்காப் படையினர் ஒருபுதிய போர்முறைத் திட்டமொன்றைவரைந்து, நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

படையினரின் குறைந்தளவு உயிரிழப்புகளுடன், இராணுவ வெற்றிகளைப் பெறுவதே அப்போர்முறைத்திட்டத்தின் நோக்கங்களுள் முக்கியமானதொன்றாகும்.

இந்த நோக்கை அடையும் எண்ணத்துடன் வான்வழித் தாக்குதலை தீவிரப்படுத்தவும் படைத்துறைத் தலைமை முடிவு செய்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி (10-10-92) சிங்களப் படைத்துறைத் தலைமையில் செய்யப்பட்ட திடீர் மாற்றங்களின் பின் வந்த படைத்துறைத் தலைமை, புலிகளுடனான போரில் புதிய போர்முறைத் திட்டமொன்றை வரைந்து, நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது.

இப்போர்முறைத் திட்டத்தின் பிரதான நோக்கம், படையினரின் குறைந்த உயிரிழப்புகளுடன் இராணுவ வெற்றிகளைப் பெறுவதுதான்.

இதன்மூலம் அண்மைக்காலமாகப் படையினர் மத்தியில் சீர்குலைந்துபோயுள்ள போரிடும் உறுதியை மீண்டும் செப்பனிட, படைத்துறைத் தலைமை எண்ணங்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் வான்வழி மூலமும், கடல்வழிமூலமும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இனிவரும் நாட்களில் - குறிப்பாக வடதமிழீழத்தில்—விமானத்தாக்குதல்களும் கடலிலிருந்து தாக்குதல்களும் மேலும் மேலும் அதிகரிக்கப்படலாம். இத்தகைய தாக்குதல்களினால் சாதாரண குடிமக்களே பெரிதும் பாதிக்கப்படுவர் என்பது நன்றாகத் தெரிந்திருந்தும் ஆகாய, கடல்வழித் தாக்குதல்களை முடுக்கிவிட அரசும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தென்தமிழீழத்தைச் சிங்கள மயமாக்கத் தேவையான அனைத்தையும் செய்ய, புதிய படைத்துறைத் தலைமை உறுதிபூண்டுள்ளது.

தென்தமிழீழம் சிங்களமயமாக்கப்படவேண்டும் என்பது, சிங்களபௌத்த பேரினவாதத்தின் மிகமுக்கிய அரசியல் இலக்காகும். இந்த இலக்கை நோக்கிச் செல்லத்தக்க வகையில் புதிய போர்முறைத்திட்டம் வரையப்பட்டுள்ளது.

தென்தமிழீழத்தின் உள்ளும், எல்லை ஓரங்களிலும் அமைக்கப்பட்டிருக்கும் சிங்களக் குடியேற்றங்களிலிருந்து, சிங்களவர்கள் அச்சத்தின் காரணமாக வெளியேறிச் செல்வது, அண்மைக் காலமாக நடந்துவரும் ஒரு நிகழ்ச்சியாகும். இக்குடியேற்றங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அரசு உறுதிகூறியிருந்த பொழுதிலும், குடியேற்றவாதிகள் வெளியேறிச் செல்வது அரசின் நில அபகரிப்பு நோக்கத்தைப் பலவீனப்படுத்துகின்றது.

எனவே, சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்து பராமரிக்கவும், பாதுகாப்பு வழங்கவும் அரசு திடமாக உள்ளது. இதற்காக தென்தமிழீழத்தில் படைக் குவிப்புச் செய்து, குடியேற்றவாசிகளையும் ஆயுதமயப்படுத்திக் குடியேற்றத் திட்டங்களைப் பாதுகாக்க முனைகின்றது.

இதன் இன்னோர் அங்கமாக, தமிழீழத்தின் இதயமான மணலாறு மீண்டும் மீண்டும் சிங்களப் படையெடுப்புக்கு இலக்காகலாம்.

மணலாற்றை ஆக்கிரமிப்பதன்மூலம் தமிழர் தாயகத்தைத் துண்டாடுவதுடன், போராட்டத்தையும் வீரியமிழக்கச் செய்யலாம் என அரசு எண்ணுகின்றது. அதற்காக முன்னரும் பெரிய அளவிலும், சிறிய அளவிலுமான பல இராணுவ நடவடிக்கைகளை அது செய்து பார்த்தது.

முன்னர், ஜெனரல் கமில்டன் வணசிங்கா படைத்துறைத் தலைமைப் பொறுப்பில் இருந்த போதே, இப்படையெடுப்புகள் நடாத்தப்பட்டது. ஆனாலும் புலிவீரர்களின் தீரமான எதிர்த் தாக்குதல்களினால் சிங்களப் படைகள் பின்வாங்கச்செய்யப் பட்டன.

(2-ஆம் பக்கம் பார்க்க)




செய்தி:— படையிலிருந்து ஓடியவர்கள், கொழும்பில் திரும்பவும் வந்து சேரலாம் என இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு



www.eelamview.com

## புலிகளின் குரல்

# போரைத் தொடர சிங்கள அரசு முடிவு

தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் அணுகுமுறைகள் மூலம் தீர்வு காணும் வழிவகைகளைச் சிறீலங்கா அரசு தொடர்ந்தும் மூடிவைத்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கும் மேலாக, இடைவிடாது தொடரும் இப்போர், சிறீலங்கா அரசிற்கு கடுமையான தேசிய நெருக்கடிகளை உண்டுபண்ணியுள்ளது. எனினும், தனது இராணுவவாதக் கொள்கையை விட்டுக்கொடுக்க சிங்கள அரசு விரும்பவில்லை.

பிறக்க இருக்கும் புதிய ஆண்டிலும் போரைத்தொடர்வதற்குரிய இராணுவ–அரசியல் தயார்படுத்தல்களைச் செய்வதில் அரசு வெளிப்படையாகவே இறங்கியுள்ளது.

இராணுவ தலைமைப்பீடத்தில் மாற்றங்களைச் செய்து போரை புதிய பரிமாணத்தில் தொடர வழிவகைகளைச் செய்துள்ளது.

நவீன ஆயுதக் கொள்வனவுக்கு ஒழுங்கு செய்து இராணுவ இயந்திரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆயுதங்களைக் கீழே போட்டால்தான் பேச்சுவார்த்தை என்று யதார்த்தமற்ற, ஏற்றுக் கொள்ளமுடியாத நிபந்தனைகளை அரசின் உயர்பீடத்தில் உள்ளவர்கள் வெளியிடுகின்றனர். இதே வேளை, தொடர்புசாதனங்களின் துணையுடன் போரைத் தொடர்வதற்கேற்றவாறு பொய்ப் பிரச்சாரங்களில் அரசு ஈடுபடுகின்றது.

இந்த இரண்டு வருடத்திற்கும் மேற்பட்ட போர் ஆண்டில் இரண்டுதடவைகள் போரை நிறுத்தி அமைதியை ஏற்படுத்த சந்தர்ப்பங்கள் கிடைத்தன. எமது முன் முயற்சியினாலும், எமது ஒத்துழைப்பினாலும் இவ் இரு சந்தர்ப்பங்களும் உருவாகின.

ஆனால், இவற்றை எடுத்த எடுப்பிலேயே சிங்கள அரசு தட்டிக்கழித்து விட்டது.

முதலாவது சந்தர்ப்பம் 1991 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி நாம் பிரகடனப்படுத்திய ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம் மூலம் உருவாகியிருந்தது.

ஆனால், நாம் நீட்டிய சமாதானக் கரத்தை வெட்டியெறிந்துவிட்டு அரசு போரைத்தொடர்ந்தது.

இச் சமாதான முயற்சி நடந்து சரியாக ஒரு வருடத்தின்பின் அதாவது இவ் வருட (1992) முற்பகுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் அவர்கள் எமது பூரண ஆதரவுடன் ஒரு சமாதான முயற்சியை எடுத்தார்.

இதையும் அரசு தடுத்துநிறுத்திவிட்டு போரைத் தொடர்ந்தது.

இதைத் தொடர்ந்தும் சில வெளிநாட்டு அரசுகளும், மனிதாபிமான நிறுவனங்களும் போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகள் எடுத்திருந்தன.

ஆனாலும் சிறீலங்கா அரசின் ஒத்துழைப்பின்மையால் அம்முயற்சிகளும் கைகூடவில்லை.

இந்த இரண்டு வருடத்திற்கும் மேலான போரில் சிங்கள அரசின் பிடிவாதத்தாலும், போர்வெறியினாலும் 10,000 இற்கு மேற்பட்ட தமிழர்கள் பலியாகியுள்ளனர். அதேவேளை அரசும் தனது படையிலிருந்த 4000 இற்கும் அதிகமான சிங்கள இளைஞர்களின் சாவுகளுக்கும் காரணமாகஇருந்துள்ளது.

அத்துடன் தொடரும் போர்காரணமாக அரசும் பாரியதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

இந்த நெருக்கடிநிலையிலும்கூட, போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விரும்பாது, தனது நாட்டின் அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசிய பணிகளையும் ஒதுக்கிவிட்டு, தொடர்ந்தும் யுத்த சன்னதம் பூண்டு நிற்கின்றது.

படைபலத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களையும் அவர்களது பொருளாதார வளங்களையும் அழித்து - நாசம் செய்து இந்த அழிவுகளுக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வை சிங்கள அரசு தேடுகின்றது.

இத்தகைய இராணுவ வழிமுறைகள் அரசிற்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கின்றனவா? என்றால் அதுவுமில்லை.

★ இராணுவ ரீதியாக புலிகளை வென்றுவிட முடியாது,

★ படைபலத்தைப் பயன்படுத்தி தமிழ் சிங்கள தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது ......

என்றெல்லாம் உள்நாட்டிலும் – வெளிநாட்டிலும், இராணுவ வட்டாரங்களிலும் – அரசியல் வட்டாரங்களிலும், ஒப்புக் கொள்ளப்பட்டிருந்த பொழுதிலும் சிறீலங்கா அரசு இவ் உண்மைகளை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

மாறாக, தமிழர்களின் அழிவிலேயே திருப்திகாணும் பேரினவாத வெறிகொண்டு ஒரு இன அழிப்பு யுத்தத்தைத் தொடர சிங்கள அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது.

அதேவேளை, அண்மைக்காலத்தில் சிங்களப்படைகள் களத்தில் தோல்விகளையே சந்திக்கின்றன என்பதும் அரசுக்குத் தெரியாததல்ல.

இருந்தாலும், சிங்கள தேசத்தைப் போருக்குத் தயார்படுத்தி போரைத் தொடர்வதிலேயே சிங்கள ஆளும் வர்க்கம் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றது.

போர் மூலமே இனப்பிரச்சனையைத் தீர்க்க உறுதியாய் உள்ளதுபோல் தோன்றுகின்றது.

உண்மையில், இப் போருக்குரிய அடிப்படைக்காரணி ஒரு அரசியல் முரண்பாடு தான்.

தமிழ் தேசிய இனத்தின் இயல்புரிமையான தேசிய சுயநிர்ணய உரிமையை வழங்க மாறி மாறி ஆட்சிபீடம் ஏறும் சிறீலங்கா அரசுகள் மறுத்துவருவதுதான் அவ் அரசியல் முரண்பாட்டிற்குக் காரணம்.

தமிழ்த் தேசியம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தனது தனித்துவத்தைப் பேணவும், தன்னை வளர்த்துக் கொள்ளவுமே அத்தகைய ஒரு அரசியல் கோரிக்கையை முன்வைத்தது.

ஆனால் 'நீதியான - நியாயமான, தமிழ்த் தேசியத்தின் இயல்புரிமையான இந்த அரசியல் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாது, சிங்கள ஆளும்வர்க்கம் தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் போரைத் திணித்து வருகின்றது.

இந்த நிலையில், வேறுவழிகளின்றி இன அழிப்புக்குள்ளாகும் எமது மக்களைப் பாதுகாக்க, எதிரி ஏவிய போரை எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறு மார்க்கங்களில்லை.

அன்புக்கினிய எமதருமை மக்களே! சிங்களப் பேரினவாதத்தின் போர் வெறியால் எழுந்துநிற்கும் இந்த அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளுங்கள்

சிங்கள அரசு ஏவிய போர் அரக்கனது கோரப் பற்கள் அனைத்தும் பிடுங்கப்படும் வரை எமது மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக, பாதுகாப்பாக வாழ சிங்கள அரசு அனுமதிக்கப் போவதில்லை.

எனவே, சிறீலங்கா அரசு எமது மக்களை அழித்தொழிப்பதற்காக கட்டியெழுப்பிவரும் இராணுவ இயந்திரத்திற்கு இணையாக நாமும் எமது படைபலத்தை கட்டியெழுப்பி எமது சுதந்திரத்தை வென்றெடுப்போம். ❋

## சிறீலங்கா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது, மீண்டும் படைத்துறைத் தலைமையின் பொறுப்பை ஜெனரல் கமில்டன் வணசிங்கா ஏற்ற பின்னர், தனது முன்னைய இராணுவ வழி முறைகள் சிலவற்றைத் தொடர்ந்தும் பின்பற்ற முனைவார்.

இதன் காரணமாக, மணலாறு–வவுனியா எல்லைப்பகுதிகளில் அரச படைகள், அடிக்கடி இராணுவ நடவடிக்கைகளைச் செய்ய முயலும். இவை எல்லாவற்றிற்கும் ஏதுவாக, சிறீலங்கா அரசு தனது இராணுவ இயந்திரத்தை நவீனமயப்படுத்திப் பலப்படுத்த, முடிவு செய்துள்ளது.

ஆட்பலத்தை அதிகரித்து படைப்பலத்தைப் பெருக்கவிரும்பிய ஆட்சியாளர்களுக்கு, படைக்கு ஆள்திரட்டுவது கடினமாகிவிட்டது. எனவே, ஆயுதங்களை நவீனமயப்படுத்துவதன் மூலம் இராணுவத்தை வலுவாக்க,முயல்கின்றது.இதன் மூலம் படையினரின் உயிரிழப்புகளையும் குறைக்கலாம் என்பது, அரசின் எதிர்பார்ப்பு.

இதற்காக, தான் சந்தித்து நிற்கும் பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலும் பெரும் பொருட் செலவு செய்து, நவீன ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில், அரசு ஆர்வமாக இருக்கின்றது.

புதிய தாங்கிகள், புதுவகை விமானங்கள், கடற்படைப்படகுகள் மற்றும் நவீன ஆயுத தளபாடங்கள் ஆகியவற்றைப் பெறுவதில் அரசு தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

எல்லாவற்றையும் ஒப்புநோக்கிப் பார்க்கின்றபோது, போரைத் தொடர்ந்து நடாத்திச்செல்ல அரசு முடிவெடுத்துவிட்டதை வெளிப்படையாகக் காணக்கூடியதாகவுள்ளது.

தமிழர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற போர்வையில் கொழும்பில் நடைபெறும் அனைத்துக் காரியங்களும் வெறும் கண்துடைப்பு–ஏமாற்று என்பது, இப்போது அப்பட்டமாகத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், நவீன ஆயுத தளபாடங்களுடனும் புதிய தந்திரோபாயங்களுடனும் எமது மக்களைக் குறிவைத்து வரும் போர் அரக்கனை எதிர்கொள்வதைத்தவிர, எமக்கு வேறு வழி இல்லை. ❋

www.eelamview.com

புலிகளின் குரல்

# போரைத் தொடர சிங்கள அரசு முடிவு

தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் அணுகுமுறைகள் மூலம் தீர்வு காணும் வழிவகைகளைச் சிறீலங்கா அரசு தொடர்ந்தும் மூடிவைத்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கும் மேலாக, இடைவிடாது தொடரும் இப்போர், சிறீலங்கா அரசிற்கு கடுமையான தேசிய நெருக்கடிகளை உண்டுபண்ணியுள்ளது. எனினும், தனது இராணுவவாதக் கொள்கையை விட்டுக்கொடுக்க சிங்கள அரசு விரும்பவில்லை.

பிறக்க இருக்கும் புதிய ஆண்டிலும் போரைத்தொடர்வதற்குரிய இராணுவ– அரசியல் தயார்படுத்தல்களைச் செய்வதில் அரசு வெளிப்படையாகவே இறங்கியுள்ளது.

இராணுவ தலைமைப்பீடத்தில் மாற்றங்களைச் செய்து போரை புதிய பரிமாணத்தில் தொடர வழிவகைகளைச் செய்துள்ளது.

நவீன ஆயுதக் கொள்வனவுக்கு ஒழுங்கு செய்து இராணுவ இயந்திரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆயுதங்களைக் கீழே போட்டால்தான் பேச்சுவார்த்தை என்று யதார்த்தமற்ற, ஏற்றுக் கொள்ளமுடியாத நிபந்தனைகளை அரசின் உயர்பீடத்தில் உள்ளவர்கள் வெளியிடுகின்றனர். இதேவேளை, தொடர்புசாதனங்களின் துணையுடன் போரைத் தொடர்வதற்கேற்றவாறு பொய்ப் பிரச்சாரங்களில் அரசு ஈடுபடுகின்றது.

இந்த இரண்டு வருடத்திற்கும் மேற்பட்ட போர் ஆண்டில் இரண்டுதடவைகள் போரை நிறுத்தி அமைதியை ஏற்படுத்த சந்தர்ப்பங்கள் கிடைத்தன. எமது முன் முயற்சியினாலும், எமது ஒத்துழைப்பினாலும் இவ் இரு சந்தர்ப்பங்களும் உருவாகின.

ஆனால், இவற்றை எடுத்த எடுப்பிலேயே சிங்கள அரசு தட்டிக்கழித்து விட்டது.

முதலாவது சந்தர்ப்பம் 1991 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி நாம் பிரகடனப்படுத்திய ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம் மூலம் உருவாகியிருந்தது.

ஆனால், நாம் நீட்டிய சமாதானக் கரத்தை வெட்டியெறிந்துவிட்டு அரசு போரைத்தொடர்ந்தது.

இச் சமாதான முயற்சி நடந்து சரியாக ஒரு வருடத்தின்பின் அதாவது இவ் வருட (1992) முற்பகுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் அவர்கள் எமது பூரண ஆதரவுடன் ஒரு சமாதான முயற்சியை எடுத்தார்.

இதையும் அரசு தடுத்துநிறுத்திவிட்டு போரைத் தொடர்ந்தது.

இதைத் தொடர்ந்தும் சில வெளிநாட்டு அரசுகளும், மனிதாபிமான நிறுவனங்களும் போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகள் எடுத்திருந்தன.

ஆனாலும் சிறீலங்கா அரசின் ஒத்துழைப்பின்மையால் அம்முயற்சிகளும் கைகூடவில்லை.

இந்த இரண்டு வருடத்திற்கும் மேலான போரில் சிங்கள அரசின் பிடிவாதத்தாலும், போர்வெறியினாலும் 10,000 இற்கு மேற்பட்ட தமிழர்கள் பலியாகியுள்ளனர். அதேவேளை அரசும் தனது படையிலிருந்த 4000 இற்கும் அதிகமான சிங்கள இளைஞர்களின் சாவுகளுக்கும் காரணமாக இருந்துள்ளது.

அத்துடன் தொடரும் போர்காரணமாக அரசும் பாரியதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

இந்த நெருக்கடி நிலையிலும்கூட, போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விரும்பாது, தனது நாட்டின் அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசிய பணிகளையும் ஒதுக்கிவிட்டு, தொடர்ந்தும் யுத்த சன்னதம் பூண்டு நிற்கின்றது.

படைபலத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களையும் அவர்களது பொருளாதார வளங்களையும் அழித்து - நாசம் செய்து இந்த அழிவுகளுக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வை சிங்கள அரசு தேடுகின்றது.

இத்தகைய இராணுவ வழிமுறைகள் அரசிற்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கின்றனவா? என்றால் அதுவுமில்லை.

★ இராணுவ ரீதியாக புலிகளை வென்றுவிட முடியாது,

★ படைபலத்தைப் பயன்படுத்தி தமிழ் சிங்கள தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது ......

என்றெல்லாம் உள்நாட்டிலும் – வெளிநாட்டிலும், இராணுவ வட்டாரங்களிலும் – அரசியல் வட்டாரங்களிலும், ஒப்புக் கொள்ளப்பட்டிருந்த பொழுதிலும் சிறீலங்கா அரசு இவ் உண்மைகளை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

மாறாக, தமிழர்களின் அழிவிலேயே திருப்திகாணும் பேரினவாத வெறிகொண்டு ஒரு இன அழிப்பு யுத்தத்தைத் தொடர சிங்கள அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது.

அதேவேளை, அண்மைக்காலத்தில் சிங்களப்படைகள் களத்தில் தோல்விகளையே சந்திக்கின்றன என்பதும் அரசுக்குத் தெரியாததல்ல.

இருந்தாலும், சிங்கள தேசத்தைப் போருக்குத் தயார்படுத்தி போரைத் தொடர்வதிலேயே சிங்கள ஆளும் வர்க்கம் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றது.

போர் மூலமே இனப்பிரச்சனையைத் தீர்க்க உறுதியாய் உள்ளதுபோல் தோன்றுகின்றது.

உண்மையில், இப் போருக்குரிய அடிப்படைக்காரணி ஒரு அரசியல் முரண்பாடுதான்.

தமிழ் தேசிய இனத்தின் இயல்புரிமையான தேசிய சுயநிர்ணய உரிமையை வழங்க மாறி மாறி ஆட்சிபீடம் ஏறும் சிறீலங்கா அரசுகள் மறுத்துவருவதுதான் அவ் அரசியல் முரண்பாட்டிற்குக் காரணம்.

தமிழ்த் தேசியம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தனது தனித்துவத்தைப் பேணவும், தன்னை வளர்த்துக் கொள்ளவுமே அத்தகைய ஒரு அரசியல் கோரிக்கையை முன்வைத்தது.

ஆனால் 'நீதியான - நியாயமான, தமிழ்த் தேசியத்தின் இயல்புரிமையான இந்த அரசியல் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாது, சிங்கள ஆளும்வர்க்கம் தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் போரைத் திணித்து வருகின்றது.

இந்த நிலையில், வேறுவழிகளின்றி இன அழிப்புக்குள்ளாகும் எமது மக்களைப் பாதுகாக்க, எதிரி ஏவிய போரை எதிர் கொள்வதைத் தவிர எமக்கு வேறு மார்க்கங்களில்லை.

அன்புக்கினிய எமதருமை மக்களே! சிங்களப் பேரினவாதத்தின் போர் வெறியால் எழுந்துநிற்கும் இந்த அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளுங்கள்

சிங்கள அரசு ஏவிய போர் அரக்கனது கோரப் பற்கள் அனைத்தும் பிடுங்கப்படும் வரை எமது மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக, பாதுகாப்பாக வாழ சிங்கள அரசு அனுமதிக்கப் போவதில்லை.

எனவே, சிறீலங்கா அரசு எமது மக்களை அழித்தொழிப்பதற்காக கட்டியெழுப்பிவரும் இராணுவ இயந்திரத்திற்கு இணையாக நாமும் எமது படைபலத்தை கட்டியெழுப்பி எமது சுதந்திரத்தை வென்றெடுப்போம்.

❋

## சிறீலங்கா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது, மீண்டும் படைத்துறைத் தலைமையின் பொறுப்பை ஜெனரல் கமில்டன் வணசிங்கா ஏற்ற பின்னர், தனது முன்னைய இராணுவ வழி முறைகள் சிலவற்றைத் தொடர்ந்தும் பின்பற்ற முனைவார்.

இதன் காரணமாக, மணலாறு–வவுனியா எல்லைப்பகுதிகளில் அரச படைகள், அடிக்கடி இராணுவ நடவடிக்கைகளைச் செய்ய முயலும். இவை எல்லாவற்றிற்கும் ஏதுவாக, சிறீலங்கா அரசு தனது இராணுவ இயந்திரத்தை நவீனமயப் படுத்திப் பலப்படுத்த, முடிவு செய்துள்ளது.

ஆட்பலத்தை அதிகரித்து படைப்பலத்தைப் பெருக்கவிரும்பிய ஆட்சியாளர்களுக்கு, படைக்கு ஆள்திரட்டுவது கடினமாகிவிட்டது. எனவே, ஆயுதங்களை நவீனமயப்படுத்துவதன் மூலம் இராணுவத்தை வலுவாக்க,முயல்கின்றது.இதன் மூலம் படையினரின் உயிரிழப்புகளையும் குறைக்கலாம் என்பது, அரசின் எதிர்பார்ப்பு.

இதற்காக, தான் சந்தித்து நிற்கும் பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலும் பெரும் பொருட் செலவு செய்து, நவீன ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில், அரசு ஆர்வமாக இருக்கின்றது.

புதிய தாங்கிகள், புதுவகை விமானங்கள், கடற்படைப்படகுகள் மற்றும் நவீன ஆயுத தளபாடங்கள் ஆகியவற்றைப் பெறுவதில் அரசு தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

எல்லாவற்றையும் ஒப்புநோக்கிப் பார்க்கின்றபோது, போரைத் தொடர்ந்து நடாத்திச்செல்ல அரசு முடிவெடுத்துவிட்டதை வெளிப்படையாகக் காணக்கூடியதாகவுள்ளது.

தமிழர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற போர்வையில் கொழும்பில் நடைபெறும் அனைத்துக் காரியங்களும் வெறும் கண்துடைப்பு– ஏமாற்று என்பது, இப்போது அப்பட்டமாகத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், நவீன ஆயுத தளபாடங்களுடனும் புதிய தந்திரோபாயங்களுடனும் எமது மக்களைக் குறிவைத்த வரும் போர் அரக்கனை எதி கொள்வதைத்தவிர, எமக்கு வேறு வழி இல்லை. ❋

www.eelamview.com

‘‘4-30 மணிக்கு சுபன் எழும். அதுக்கு முன்னமே, சனம் வந்து அவனைப் பார்க்க நிற்கும்.

எழும்பினதிலிருந்து வந்தவங்களை சுபன் சந்தித்துக் கதைக்கும். சண்டைக்குப் போட்டு வந்து களைச்சு இருக்கும்; அப்பவும் யாரும் சந்திக்க வந்தா சந்திச்சு கதைக்கும்.

வெளியிலை வேலை செய்யேக்கை சரியாச் செய்வம்; இல்லாட்டி சனம் சுபனிட்ட சொல்லிடும்.

நாங்கள் ஏதும் சொன்னால் உங்களோட என்ன பேச்சு. நாங்க தளபதிகிட்ட சொல்லிக்கிறோம் என்று, சனம் சொல்லும்.

சுபன் செத்ததை அவங்களாலை தாங்கிக்க முடியலை.’’

மக்களின் சிக்கல்களைத் தீர்ப்பதில் சுபன் காட்டிய கரிசனையையும், அவனுக்கும் மக்களுக்கும் இருந்த நெருக்கத்தையும் பரஞ்சோதி சொல்லிக்கொண்டிருந்தான்.

‘‘குடும்பங்கள் பிரிஞ்ச சிக்கல் எண்டால் சுபன் நேரடியாகவே தலையிடும். எவ்வளவு குடும்பங்களை சேர்த்து வைத்திருக்கும்’’.

மன்னாரில் கள்ளியடியில் பிறந்த சுபனின் குடும்பம் பெரியது. ‘அண்ணே...... என்னை வளர்க்க எனது அப்பர் 100 மாடு வளர்த்தாராம்’ என்று சுபன் சொல்லிச் சிரிக்கும்.

மழைக்கு இருண்ட வானத்தில் மின்னல் வந்து சிறிது நேரம் தரும் வெளிச்சத்தில் இருட்டே தெரியாதது போல, சுபன் சிரிக்கும்போது அவனது பல்லின் வெண்மையில் அவன் கறுப்பு முகம் மறைந்து போகும். மாட்டில் பால் சுறக்கும்போது ‘சர், சர்’ என சீராக வரும் ஒலி போலவே சுபன் கதையும் சீராக, மெல்லிய இசை நயத்துடன் ஒலிக்கும்.




அடிக்கடி சென்று பார்க்கும். கடைசியாகவும் பல வேலைகளைச் செய்யச் சொல்லிச்சு. ஆனால் பார்க்கத்தான் ஆள் இல்லாமல் போச்சு.’’

பரஞ்சோதியின் நா தளதளத்தது.

‘‘எதையும் அழகாகச் சிறப்பாகச் செய்யணும் எனச் சொல்லும்; செய்தும் காட்டும்.’’

‘‘தோரணம் கட்டிக்கொண்டு நின்றேன். சுபன் வந்ததைப் பார்த்தேன். ஏதோ பிழை பிடிக்கும். பின் தானே நின்று சுட்டிக்காட்டும்.

மழை பெஞ்சா இரவிலே நித்திரை இல்லை என்று தெரிஞ்சுக்கோணும். சுபன் வேட்டைக்குப் போகும். நாங்க துவக்கை தூக்கினா மானுக்கோ, முயலுக்கோ தாங்க தப்பிக்கலாம் எனத் தெரியும்.

சுபன், ‘நீ போய் எடுத்து வா’ என்று சொல்லிவிட்டு சுடும். குறி தப்பாது.

குறிதவறாமல் சுடுவதில் மட்டுமில்லை, ஆயுதங்களில் சுபன் மிக்க கவனம். ‘எத்தனையோ போராளிகளின் குருதிசிந்தி பெற்ற ஆயுதம்’ என்று அடிக்கடி சொல்லி, ஆயுதங்களை மிக கவனமாகக் கவனிக்கும்.

ஆயுதம் பேணுதல் எப்படி இருக்கவேண்டும் என்று நான் விளக்கத் தேவையில்லை. அது உங்களுக்குத் தெரியும் என்று சொல்லிவிட்டு பரஞ்சோதி,

கண்டிப்பு - அரவணைப்பு - அது முக்கியம். அதை மறந்திடாதேங்கோ என்றான்.

மடு ஏதிலிகள் தங்ககத்தை ஒழுங்குபடுத்த சுபன் கடுமையாக உழைத்தான்.

இப்படியான ஒரு சிக்கலை மன்னார் சந்தித்தது. இதுதான் முதல்தடவை.

இருக்கும் குறைந்த வசதிகளுடன் தன்னால் இயலக் கூடியதை அவன் செய்தான்.

இந்தியாவில் பயிற்சி முடித்துத் திரும்பிய சுபன், லெப். கேணல் விக்டரோடு நின்று மன்னாரில் செயற்பட்டான். 1986 இன் நடுப் பகுதியில் மன்னாரில் நடந்த ஒரு சண்டையில் காயமடைந்து, சிகிச்சைக்காகத் தமிழ்நாடு சென்ற சுபன், அதன் பின்பு தலைவரோடு மூன்று ஆண்டுகள் நின்றான்.

2. 4. 87 அன்று, காங்கேசன்துறை தங்ககத்தில் சிறீலங்காப் படையுடனான மோதலில் காயமடைந்தான்.

தலைவர் பிரபாகரனைத் தேடி, மணலாற்றுக் காட்டில் இந்தியப் படையினர் ‘செக்மேற்’

# மன்னாரின் முத்து

‘‘அப்பர் சொந்தமா மாடு வளர்த்தவரோ இல்லை ஊரிலை இருக்கும் மாடுகளைப் பிடித்து வந்து அடைத்து வளர்த்தவரோ’’ என, நாம் சுபனைக் கிண்டல் செய்வதுண்டு.

‘‘இந்தியாவிலே பயிற்சி முகாமிலே, சுபனை மாட்டுக்குள்ளதான் காணலாம். சுகயீனமான பயிற்சிப் போராளிகளை பராமரிக்க பால் தேவைப்பட்டது. அதை சுபன் செய்தது.’’

தமிழ்நாட்டில் ஒரு மலைப்பகுதியில் இந்த பயிற்சி முகாம் இருந்தது. அடிக்கடி கீழே வந்து பால் எடுத்துச்செல்ல முடியாது.

மன்னாரின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையை சுபன் காட்டினான்.



விதைக்காத நெல்வயல்களை விதைக்க முயற்சி செய்தான்.

மக்கள் குறை தீர்க்க அடிப்படை வசதிகளை அங்கே அமைக்க முயன்றான்.

‘உயிலங்குளத்திற்கும் அடம்பனுக்கும் இடையிலதான் மன்னார் நகரம் அமைய வேண்டும்’ என சுபன் அடிக்கடி கூறும். ‘தமிழீழத்தில் அப்படித்தான் இருக்கும்’ என சொல்லிக் கொள்ளும்.

மன்னார் மாவட்ட போராளிகளின் குடும்பங்களின் துன்பங்கள் துயரங்கள் அவனை மிகவும் வாட்டும்.

மன்னாரில் வீரச்சாவைச் சந்தித்த எல்லாப் போராளிகளின் நிழற்படங்களுடன் கூடிய ஒரு வீடு, முதன் முதலில் தமிழீழத்தில் மன்னாரில்தான் அமைக்கப்பட்டது.

‘‘மாவீரர் துயிலும் இல்லத்தை மிகவும் சிறப்பாக அமைக்க சுபன் கவனம் எடுத்திச்சு.

நான் ஒளிச்சிட்டேன். ஆள் வந்திச்சு. பார்த்துவிட்டு தோரணங்களை அவிட்டுக் கட்டிச்சு. பரஞ்சோதி எங்கே என்று கேட்டுது.போனேன்.’’

‘‘தோரணம் கட்டினது சரியா’’ என்று கேட்டது.

‘‘சரிதான்’’ என்றேன்.

‘‘ஒன்றிலே நாலு முடிச்சு கட்டி இருக்கிறீங்க, இன்னுமொன்றிலே மூன்று முடிச்சு போட்டிருக்கிறீங்க. எல்லாம் ஒரு சீரா இருந்தா நல்லதுதானே’’ என்று சொல்லிச்சு.

‘‘இப்படித்தான் எந்த விடயமென்றாலும் அது சின்ன விடயமென்றாலும் சரியாகச் செய்ய வேண்டும் எனச் சொல்லும்.’’

‘‘பிழை யாரும் விட்டா கண்டிக்கும். பிழைகளை தெளிவாக விளங்கப்படுத்தும்.’’

‘‘கண்டிச்சுப் போட்டு நல்லா அரவணைக்கும்.’’

‘‘கண்டிப்பும் அரவணைப்பும் அதை எப்போதும் குறிப்பிட மறந்திடாதீங்க’’ என்றான் பரஞ்சோதி.

‘‘பண்டிக் கருக்கல் என்றால் சுபனுக்கு விருப்பம். தொதோல், மசுகெட் இதுவும் விருப்பம்.’’

‘‘ஆள் நல்லா சமைக்கும். ஒய்வா இருந்தா சமைக்கும்; சமைச்சு எல்லோருக்கும் சாப்பிட கொடுக்கும்.’’

மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி

## லெப். கேணல் சுபன்

(வினாசித்தம்பி சுந்தரலிங்கம்)

கள்ளியடி, இலுப்பைக்கடவை,
மன்னார்.

| பிறப்பு: | வீரச்சாவு: |
| --- | --- |
| 21-07-1965 | 25-09-1992 |

‘‘ஒரு நாள் ஒரு ஐயாவை கூட்டி வந்தாங்க. அவர் சமையலிலே பெரிய ஆள் - அதைச் செய்வார் இதைச் செய்வார் எண்டாங்க.

சுபன் விதவிதமாக ‘அது செய்வீங்களா இது செய்வீங்களா’ எனக் கேட்டுது. அவருக்கு கேட்ட ஒன்றுமே செய்யத் தெரிந்திருக்கலை. சுபன்தான் அவருக்கு செஞ்சுகாட்டும்.’’

அந்த ஐயாவும் சமையலும்...... அது பெரிய பகிடி.

— i, ii, iii என்ற இராணுவ நடவடிக்கைகளைச் செய்தபோது, அந்தச் சண்டைகளில் நின்றான்.

15.4.89 அன்று, வெலி ஓயாவில் சிங்களப் படையை மறைந்து தாக்கிய நிகழ்ச்சியில் முதன்மைப்பங்கு வகித்தான்.

1989 நடுப்பகுதியில் மன்னார் மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்றான்.

சுபன் பொறுப்பேற்று சிறிது காலத்தில், மேஜர் சூட்டியின் தலைமையில், மன்னார் மருத்துவமனையில் இந்தியப் படையின் சிறிய தங்ககம் மீதான தாக்குதல் நடந்தது. அத்தாக்குதலில் 24 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர்.



நாலு ‘பிறண்’ இலகு இயந்திர துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

1990 இன் ஆரம்பத்தில், கிளிநொச்சிக் காட்டுப்பகுதியில் இருந்த ஈ. என். டி. எல். எவ். துரோகக் கும்பலின் முகாம்மீது நடாத்தப்பட்ட பெரிய தாக்குதலில், சுபன் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்தான்.

தமிழீழ-சிறீலங்காப் போர் மீண்டும் வெடித்த பின் தலைமன்னார் பழைய பாலம் படைத் தங்ககம்(16 6.90), கஜுவத்தைதங்ககம்(21 6.90) என்பன முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டன.

கஜுவத்தையில் இருந்த பவள் வாகனம் ஒன்று கையகப்படுத்தப்பட்டது.

சிலாவத்துறை, ஆனையிறவு படைத் தங்ககங்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் சுபன் கலந்துகொண்ட முக்கிய தாக்குதல்களாகும்.

சுபனின் காலத்தில் வஞ்சியன் குளத்திலும் (29 . 04 . 91) வேப்பங்குளத்திலும்

(9 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# படைத்துறைப் பதவி நிலைகளும் படை அமைப்பும்

★ **05-07-1992** அன்று இயக்கச்சியில் சுட்டு வீழ்த்தப்பட்ட, ரஷ்ய இராணுவத்தால் வடிவமைக்கப்பட்டு சீன இராணுவத்தால் தயாரிக்கப்பட்ட 'வை – 8' (அன்ரனோ–8) விமானத்தில், சிறீலங்கா விமானப்படையின் முதல்தர ஓட்டுனர் எனத் தற்போதைய விமானப்படைத் தளபதியால் வருணிக்கப்பட்ட, அமெரிக்கா - இங்கிலாந்து போன்ற நாடுகளில் விசேட பயிற்சி பெற்றவருமான - ஸ்குவாடன் லீடர் பைசார் காசீர் உட்பட 19 விமானப்படையினர் இறந்தனர்.

★ வவுனியா இராணுவ நடவடிக்கையில் மூன்று றெஜிமென்ட் படையணிகள் ஈடுபடுத்தப்பட்டன.

★ அராலித்துறைக் கண்ணிவெடியில் லெப். ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விமலரட்ண, றியர் அட்மிரல் ஜெயமகா, லெப். கொமடோர் லங்காதிலக ஆகியோர் உட்பட ஒன்பது அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

★ கிழக்கு மாகாணத்தில் மட்டும் கடந்த சில மாதங்களில், அரை பற்றாலியன் அளவு துருப்பினர் கொல்லப்பட்டுள்ளனர்.

★ யாழ். குடாநாட்டைக் கைப்பற்றி வைத்திருக்க குறைந்தது இரண்டு டிவிசன்களாவது தேவைப்படும்.

...இதேபோன்று சிறீலங்கா தரப்பிலிருந்து வெளியாகும் செய்திகளை, நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம். ஆனால் இச்செய்திகளில் பயன்படுத்தப்படும் இராணுவச் சொற்களை, பெரும்பாலான மக்கள் சரியாக விளங்கிக்கொள்ள முடியாதிருக்கின்றனர்.

இந்த இராணுவச் சொற்களைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்வதன் மூலம், இராணுவப் பதவிநிலைகளின் கொள்ளளவையும், குறித்த சொற்பதங்களின் கனபரிமாணத்தையும், சண்டைகளின் தன்மைகளையும் விளங்கிக்கொள்ள முடியும்.

முப்படைகளினதும் பதவிநிலைகள் தனித்தனியே எந்த வரிசை ஒழுங்கில் உயர்ந்து செல்கின்றன?

படைஅமைப்பில் சிறிய படையணி எது? பெரிய படையணி எது?

இப்படையணிகள் ஒவ்வொன்றும் எப்படி அழைக்கப்படுகின்றன?

அவை ஒவ்வொன்றினதும் ஆட்பலம் என்ன?

என்பன போன்ற அடிப்படை இராணுவ அறிவைத் தரத்தக்க சில விபரங்களை, இந்தக் கட்டுரையில் தர முயல்கின்றோம்.

அம்பு – வில், வாள், ஈட்டி... போன்ற ஆயுதங்களைக் கொண்டிருந்த காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்ற மன்னராட்சிக் காலத்துப் படைஅமைப்புமுறை மாறி, இன்று, துப்பாக்கிகள், பீரங்கிகள், கப்பல்கள், விமானங்கள் என்பவற்றைக் கொண்ட தரைப்படை, கடற்படை, வான்படை என்ற முப்படை அமைப்பு தோற்றம் கண்டு, அதற்கேயுரித்தான வகையில் பதவிநிலைகளும் படைப்பிரிவு முறைகளும் பிறந்து விட்டன.

இந்த நவீன படைத்துறை ஒழுங்கமைப்பின் பிறப்பிடமாக பிரித்தானியாவே கொள்ளப்படுகின்றது. பிரித்தானியாவில் தோற்றம் கண்ட இப்படைத்துறைப் பாரம்பரியமே, இன்று பெரும்பாலான உலக நாடுகளில் காணப்படுகின்றது.

லெப்ரினன்ட், கப்டன், மேஜர், லெப். கேணல் போன்ற இராணுவப் பதவிநிலைகளை, எமது இயக்கமும் வீரமரணமடைந்த போராளிகளுக்கு வழங்கி வருவதனால், எமது மக்களும் இச் சொற்பதங்களை விளங்கி வைத்திருக்கின்றனர். இப் பதவிநிலைகள் இராணுவத்திற்கு, அதாவது தரைப்படைக்கு மட்டும் உரித்தானதாகும்.

இதேபோன்று கடற்படையும், ஆகாயப் படையும் அவற்றிற்கே உரித்தான தனித் தனி பதவிநிலைப் பெயர்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால் இவற்றைப்பற்றி எமது மக்கள், இதுவரை பெரிதாக ஒன்றையும் அறியவில்லை. கடற்படை - ஆகாயப் படை பதவிநிலைகளை எமது இயக்கம் இதுவரை பயன்படுத்தாததன் காரணத்தாலும், இவ்விரு படைகளையும் சேர்ந்த சிங்களப்படை அதிகாரிகள் அண்மைக்காலம் வரை போரில் கொல்லப்படாததன் காரணத்தாலும், கடற்படை - ஆகாயப்படை ஆகியவற்றின் பதவிநிலைச் சொற்கள் எமது மக்களுக்கும் பரிச்சயம் இல்லாது இருந்தன.

ஆனால் அண்மைக்காலத்தில் கடற்படை, ஆகாயப்படையைச் சேர்ந்த சிங்கள அதிகாரிகள் கொல்லப்பட, அவர்களது பதவிநிலைகளை மக்களும் உச்சரிக்கத் தொடங்கியுள்ளனர். இந்த நிலையில் அப் பதவிநிலைகளின் கனபரிமாணங்களை மக்களும் அறிந்துகொள்ள வேண்டும் என, நாம் விரும்புகின்றோம்.

ஒரு நவீன கடற்படையைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற தலைவர் பிரபாகரனின் பெரு முயற்சியின் ஆரம்பக் கட்டமாகவே, விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பு இருக்கின்றது. இது, கடலில் பெரிய சாதனைகளைச் செய்து கொண்டிருக்கின்ற பொழுதிலும், வீரமரணமடையும் கடற்புலிப் போராளிகளுக்கு தரைப்படைப் பாரம்பரியத்திற்கு உட்பட்ட வகையிலேயே பதவிநிலைகளை வழங்கி வருகின்றோம்.

எதிர்காலத்தில், முழுமையான ஒரு கடற்படையாக எமது கடற்புலிகள் வளர்ந்த பின்னர், பதவிநிலைகளும் கடற்படைக்கே உரியதாக மாற்றமடையும்.

1. தரைப்படையைப் பொறுத்தளவில் 'இரண்டாவது லெப்ரினன்ட்' என்ற பெயருடன் தொடங்கும் பதவிநிலையானது, 'ஜெனரல்' வரை செல்கின்றது. ஜெனரலுக்கு மேல் 'பீல்ட்மார்சல்', 'மார்சல்' என்ற உயர் பதவிகளும் கொடுக்கப்படுவதுண்டு. ஆனால் இவை சிறீலங்கா இராணுவத்தில் இல்லை. பெருந்தொகையில் ஆட்பலத்தைக்கொண்ட பெரிய நாடுகளில்தான் இப்பதவிகள் வழக்கத்தில் உள்ளன.

இரண்டாவது லெப்ரினன்ட்.
லெப்ரினன்ட்.
கப்டன்.
மேஜர்.
லெப்ரினன்ட் கேணல்.
கேணல்.
பிரிகேடியர்.
பிரிகேடியர் ஜெனரல்.
மேஜர் ஜெனரல்.
லெப்ரினன்ட் ஜெனரல்.
ஜெனரல்.

என்பனவே தரைப்படைப் பதவிகளாகும்.

இதில் 'பிரிகேடியர் ஜெனரல்' என்ற பதவியும் சிறீலங்கா இராணுவத்தில் இல்லை. ஆனால், இப் பதவிநிலை பெரிய நாடுகளில் உள்ளது.

2. கடற்படையைப் பொறுத்தளவில் 'உதவி லெப்ரினன்ட்' என்ற பெயருடன் ஆரம்பிக்கும் பதவிநிலையானது 'அட்மிரல்' வரை செல்கின்றது.

உதவி லெப்ரினன்ட்.
லெப்ரினன்ட்.
லெப்ரினன்ட் கொமாண்டர்.
கொமாண்டர்.
கப்டன்.
கொமடோர்.
றியர் அட்மிரல்
வைஸ் அட்மிரல்.
அட்மிரல் .

என்பனவே கடற்படைப்பதவிகளாகும்.

3. வான்படையில் 'பைலட் ஒவ்ஃவீசர்' என்ற பெயருடன் தொடங்கும் பதவிநிலையானது, 'எயர் சீஃவ் மார்சல்' வரை செல்கிறது.

பைலட் ஒவ்ஃவீசர்.
பிளையிங் ஒவ்ஃவீசர்
பிளைற் லெப்ரினன்ட்.
ஸ்குவாடன் லீடர்.
விங்கொமாண்டர்.
குறூப் கப்டன்.
எயர் கொமடோர்.
எயர் வைஸ் மார்சல்.
எயர் மார்சல்.
எயர் சீஃவ் மார்சல்·

என்பனவே வான்படையின் பதவிகளாகும்.

இதேசமயம் அதிகாரிகள் என்ற வகைக்குள் அடக்கப்படாத பதவிநிலைகளும் முப்படையில் உண்டு.

## சிறீலங்கா இராணுவப் படை அமைப்பு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | செக்சன் | | | — | ஏறக்குறைய | 9 பேர் |
| 3 | செக்சன் | — | 1 பிளாட்டூன் | — | ஏறக்குறைய | 35 பேர் |
| 4 | பிளாட்டூன் | — | 1 கொம்பனி | — | ஏறக்குறைய | 150 பேர் |
| 6 | கொம்பனி | — | 1 பற்றாலியன் | — | ஏறக்குறைய | 1,000 பேர் |
| 6 | பற்றாலியன் | — | 1 றெஜிமென்ட் | — | ஏறக்குறைய | 6,000 பேர் |
| 5 | றெஜிமென்ட் | — | 1 டிவிசன் | — | ஏறக்குறைய | 30,000 பேர் |
| 3 | டிவிசன் | — | 1 ஆமி | — | ஏறக்குறைய | 90,000 பேர் |

(மறுபக்கம் பார்க்க)

www.eelamview.com

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய பதவிநிலைகளில் இருப்பவர்களுக்கு முடிவெடுக்கும் அதிகாரம் இருக்காது.

இவர்கள் அதிகாரமற்ற அதிகாரிகள். (Non Commissioned officers) என அழைக்கப்படுகின்றார்கள்.

அவையாவன:

தரைப்படையில் 'லான்ஸ்கோப்ரல்' நிலையிலிருந்து 'ரெஜிமென்ரல்சார்ஜன் மேஜர்' நிலை வரையும்.

கடற்படையில் 'ஓடினறிசீமான்' நிலையிலிருந்து 'மாஸ்ரர்சீஃவ்பெற்றிஒவ்ஃவீசர்' நிலை வரையும்.

வான்படையில், 'கோப்ரல்' நிலையிலிருந்து 'வொரன்ட்ஒவ்ஃவீசர்' நிலைவரையும் உயர்ந்து செல்கின்றது. இவற்றிற்கு அப்பால் முன்னர் பார்த்தபடி, அதிகாரிகளுக்கான பதவிநிலைகள் தொடங்குகின்றன. கீழே உள்ள நிரலைப் பார்க்கவும்

படையினருக்கான பதவிநிலைகளை அவர்களுடைய சேவைக்காலம், அளப்பரிய பணிகள், திறமைகள் ஆகியன தீர்மானிக்கின்றன.

ஒவ்வொரு பதவிநிலையினையும் வகிக்கும் படையதிகாரிகளும், தமக்கு கீழ் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய படைவீரர்களைக் கொண்டிருப்பர். ஆனால் இது நிரந்தரமான ஒரு பொதுக் கணக்காக இருக்கமாட்டாது. அது ஒவ்வொரு நாட்டினையும், இராணுவ நடவடிக்கைகளின் தன்மைகளையும், சூழ்நிலைகளையும் பொறுத்தே அமையும்.

இதேசமயம் படைவீரர்களுக்கு விருது வழங்கும் நடைமுறையும் உள்ளது. படைவீரர்கள் புரியும் அற்புதமான சாதனைகளுக்காக, ஈட்டப்படும் பெரு வெற்றிகளுக்காக, இவ் விருதுகள் வழங்கப்படுகின்றன. சிலவேளைகளில் கௌரவ விருதாகவும் அவை அமையும். அதிகாரிகள், சாதாரண படைவீரர்கள் என்ற வேறுபாடின்றி தீரச் செயல்களைப் புரியும் எவர்க்கும் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

இவ்விருதுகள் ஒவ்வொரு பெயரிட்டு சாதாரணம், உயர்தரம், அதி உயர்தரம் என்ற தராதரங்களுடன் வழங்கப்படுகின்றன. விருதுகளுக்கு சூட்டப்படும் பெயர்கள் அந்தந்த நாடுகளின் வரலாறு, பண்பாடு, பாரம்பரியங்களைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

இனி, படைஅமைப்புமுறை பற்றி நோக்குவோம். படை வீரர்களை போர்க்களங்களில் சுலபமாக வழிநடாத்துவதும் பராமரிப்பதும் படைப்பிரிவுஅமைப்பின் பிரதான நோக்கமாகும்.

இப்படை அமைப்பில் மிகச்சிறியது 'செக்சன்' என அழைக்கப்படுகின்றது. இது ஏறக்குறைய 9 வீரர்களைக் கொண்டிருக்கும். இதிலிருந்து ஆட்தொகை அதிகரிக்க அதிகரிக்க பிளாட்டூன் (35 பேர்), கொம்பனி (150 பேர்), பற்றாலியன் (1000 பேர்), ரெஜிமெண்ட் (6000 பேர்), டிவிசன் (30, 000 பேர்), என்று உயர்ந்து சென்று இறுதியாக ஏறக்குறைய 90, 000 வீரர்களைக் கொண்ட, ஆமி என்பது வரை செல்கின்றது.

இது சிறீலங்காப் படையில் நடைமுறையிலுள்ள கணக்கு விபரமாகும். ஆனால் இது, நாட்டுக்கு நாடு அவற்றின் படைபலத்திலுள்ள ஆட்தொகையின் அளவுக்கு அமைய படையணிகளிலுள்ள ஆட்தொகை மாறுபடும்.

ஆகவே ஒவ்வொரு படையணியிலும் இவ்வளவு பேர்தான் இருப்பார்கள் என்று வரையறுத்துக் கூறமுடியாது.

இப்படைப்பிரிவுகள்ஒவ்வொன்றும்எப்படி அமைகின்றன என்பதை தொடக்கப் பக்கத்தில்பெட்டியிட்டுக் காட்டியுள்ளோம்

மேலும் இப்படை அமைப்புக்குள் இருக்கின்ற படைப்பிரிவுகளுக்கு, பெயர்கள் இட்டு அழைக்கும் வழக்கமும் உண்டு.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, இம்ரான் – பாண்டியன் படையணி என்று நாம் அழைப்பது போல, சிங்களப்படையும் சிங்க ரெஜிமெண்ட், கெமுனு ரெஜிமெண்ட், கஜபாகு ரெஜிமெண்ட் எனப் பெயரிட்டழைக்கின்றது.

இப் பெயர் சூட்டல்களும், விருதுகளுக்குச் சூட்டப்படுவது போல அந்தந்த நாடுகளின் வரலாறு, பண்பாடு, பாரம்பரியங்களைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

இதுவரை படை அமைப்பின் பதவி நிலைகளையும், படைப் பிரிவுகளின் பெயர்கள் அவற்றின் கனபரிமாணங்கள் பற்றியும், அடிப்படையான ஆரம்ப அறிவை ஓரளவு தந்திருக்கின்றோம்.

முப்படைகளினதும் பதவி நிலைகளை வெளிப்படுத்துமுகமாக அந்தந்த அதிகாரிகள் அணிந்திருக்கும் பட்டிகளிலுள்ள குறியீட்டுச் சின்னங்களையும் அதற்குரிய பதவிநிலைகளையும் இனங்கண்டு, அவர் எந்தப் பதவி நிலையை வகிப்பவர் என அறிந்து கொள்வதற்கு உதவியாக, பதவிநிலைக் குறியீடுகளின் இணைப்பொன்றைத் தனியாகத் தந்துள்ளோம். அதனைப் பார்க்கவும். அது சிங்களப் படையினர் பயன்படுத்தும் பதவிநிலைப் பட்டியல் என்பது, குறிப்பிடத்தக்கது.

இப்பட்டிகள் சிறீலங்காவினுடையது என்பதால் சிறீலங்காவின் தேசிய சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் உலகநாடுகளின் இராணுவப் பட்டிகளில் அந்தந்த நாடுகளின் தேசிய சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

நாம் தமிழீழத்தின் தேசிய சின்னமாகிய புலியைப் பொறித்துள்ளோம். ※

## அதிகாரமுள்ள மேலாளர்கள்

*[Commissioned Officers]*

### தரைப்படை

- ***இரண்டாவது லெப்ரினன்ட்*** (2nd Lieutenant)
- ***லெப்ரினன்ட்*** (Lieutenant)
- ***கப்டன்*** (Captain)
- ***மேஜர்*** (Major)
- ***லெப்ரினன்ட் கேணல்*** (Lieutenant Colonel)
- ***கேணல்*** (Colonel)
- ***பிரிகேடியர்*** (Brigadier)
- ***பிரிகேடியர் ஜெனரல்*** (Brigadier General)
- ***மேஜர் ஜெனரல்*** (Major General)
- ***லெப்ரினன்ட் ஜெனரல்*** (Lieutenant General)
- ***ஜெனரல்*** (General)

### கடற்படை

- ***உதவி லெப்ரினன்ட்*** (Sub Lieutenant)
- ***லெப்ரினன்ட்*** (Lieutenant)
- ***லெப்ரினன்ட் கொமாண்டர்*** (Lieutenant Commander)
- ***கொமாண்டர்*** (Commander)
- ***கப்டன்*** (Captain)
- ***கொமடோர்*** (Commodore)
- ***றியர் அட்மிரல்*** (Rear Admiral)
- ***வைஸ் அட்மிரல்*** (Vice Admiral)
- ***அட்மிரல்*** (Admiral)

### வான்படை

- ***பைலட் ஒவ்:வீசர்*** (Pilot Officer)
- ***பிளைட் ஒவ்:வீசர்*** (Flying Officer)
- ***பிளைட் லெப்ரினன்ட்*** (Flight Lieutenant)
- ***ஸ்குவாடன் லீடர்*** (Squadron Leader)
- ***விங் கொமாண்டர்*** (Wing Commander)
- ***குறூப் கப்டன்*** (Group Captain)
- ***எயர் கொமடோர்*** (Air Commodore)
- ***எயர் வைஸ் மார்சல்*** (Air Vice Marshal)
- ***எயர் மார்சல்*** (Air Marshal)
- ***எயர் சீ:வ் மார்சல்*** (Air Chief Marshal)

## அதிகாரமற்ற மேலாளர்கள்

*[Non Commissioned Officers]*

### தரைப்படை

- ***லான்ஸ் கோப்ரல்*** (Lance Corporal)
- ***கோப்ரல்*** (Corporal)
- ***சார்ஜன்ட்*** (Sergeant)
- ***ஸ்ராஃவ் சார்ஜன்ட்*** (Staff Sergeant)
- ***சார்ஜன்ட் மேஜர்*** Sergeant Major (Warrant Officer Class - 2)
- ***றெஜிமென்ரல் சார்ஜன்ட் மேஜர்*** Regimental Sergeant Major) (Warrant Officer Class – 1

### கடற்படை

- ***ஓடினறி சீமன்*** (Ordinary Seaman)
- ***ஏபிள் சீமன்*** (Able Seaman)
- ***டைவிங் சீமன்*** (Diveing Seaman)
- ***லீடிங் சீமன்*** (Leading Seaman)
- ***பெற்றி ஒவ்ஃவீசர்*** (Petty Officers)
- ***சீஃவ் பெற்றி ஒவ்ஃவீசர்*** (Chief Petty Officers)
- ***பிளீட் சீஃவ் பெற்றி ஒவ்ஃவீசர்*** (Fleet Chief Petty Officers)
- ***மாஸ்ரர் சீ:வ் பெற்றி ஒவ்:வீசர்*** (Master Chief Petty Officers)

### வான்படை

- ***கோப்ரல்*** (Corporal)
- ***சார்ஜன்ட்*** (Sergeant)
- ***பிளைட் சார்ஜன்ட்*** (Flight Sergeant)
- ***வொறன்ற் ஒவ்:வீசர்*** Warrant Officer)

www.eelamview.com

# கட்டைக்காட்டில் சாதனை

இம்மாதம் 1ஆம் திகதி (01 - 10 - 1992) இரவு 11.30 மணிக்கு வெற்றிலைக் கேணி - ஆனையிறவுப் பகுதியில் அமைந்திருக்கும் இராணுவ வேலியின் ஒரு பகுதியாகிய கட்டைக்காட்டில், நாம் ஒரு பாரிய தாக்குதலைத் தொடுத்தோம்.

இத் தாக்குதலின் முடிவில் கட்டைக்காடு, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இடம்பிடித்துவிட்ட ஒரு வரலாற்றுச் சாதனையைக் கண்டது.

சிங்களப் படையினரின் ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றிய எமது போராளிகள், அங்கிருந்த பெருந்தொகையான ஆயுதங்களையும், இலட்சக்கணக்கான ரவைகளையும் மற்றும் வெடிப் பொருட்களையும் - இராணுவத் தளபாடங்களையும் வெற்றிகரமாக எடுத்துவந்து சேர்த்தனர். 207 ஆயுதங்களும், சுமார் மூன்று இலட்சம் ரவைகளும், பெருந்தொகையான வெடிப் பொருட்களும் மற்றும் இராணுவத்தளபாடங்களும் இரண்டு வாகனங்களும் கைப்பற்றப் பட்டவைகளுள் அடங்கும்.

அதேசமயம் ஒரு மினிமுகாமையும் 3 கி. மீ. நீளமான இராணுவ வேலியையும் சிதைத்து, அங்கிருந்த காவலரண்களையும் அழித்துவிட்டு வந்தனர்.

புலிகள் படைத்த இச் சாதனை சிறீலங்காவின் இராணுவ - அரசியல் வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இப் பேரதிர்ச்சிக்குக் காரணம், பெருமளவில் ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டது மட்டுமல்ல, புலிகளால் நெருங்கமுடியாதென மிகவும் பாதுகாப்பான பகுதியில் படையினர் அமைத்து வைத்திருந்த ஆயுதக்கிடங்கை, புலிகள் எப்படிக் கைப்பற்றினர் என்பதுமாகும்.

இவ் வியத்தகு சாதனையை எமது இயக்கத்தின் இம்ரான்-பாண்டியன் படையணியும், மகளிர் படைப்பிரிவினரும், கடற் புலிகளும் இணைந்துசாதித்துள்ளனர்.

இப் பிரமாண்டமான சாதனை, புலிகளின் இராணுவ வல்லமையை உலக அரங்கில் மேலும் உயர்த்தியுள்ளது.

புலிகளின் துல்லியமான வேவு, திட்டமிடல், இராணுவ தந்திரோபாயங்கள், தாக்குதிறன், அர்ப்பண உணர்வு என்பன உலக இராணுவ நிபுணர்களினால் வியந்து பார்க்கப்படும் ஒன்றாக மாறி விட்டது.

அங்கிருந்து நாம் கைப்பற்றிய ஆயுதங்கள், ரவைகள், வெடிப்பொருட்கள், மற்றும் இராணுவத் தளபாடங்களின் மொத்தப் பெறுமதி ஐந்து கோடி ரூபாவென, சிறீலங்காவின் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த ஆயுத தளபாடங்களை நாங்கள் எங்காவது கொள்வனவு செய்து தமிழீழத்திற்குள் கொண்டுவருவதாக இருந்தால், அவற்றிற்காகும் செலவுடன் சேர்த்துப் பெறுமதியைப்பார்த்தால், இதைவிட மிக அதிமாகும் என்பது கவனிக்கத்தக்கது.

இவ் வரலாற்றுச்சாதனையை நிகழ்த்தும் முயற்சியில், பதினான்கு புலிவீரர்கள் மாவீரர்களாயினர்.

இவர்களில் ஒருவரான மேஜர் கார்வண்ணன், செயற்கரியசெயல் ஒன்றிற்காகத் தலைவர் பிரபாகரனிடமிருந்து பரிசிலைப் பெற்றவர் என்பது, குறிப்பிடத்தக்கது.

லெப். ஜெனரல் கொப்பேகடுவ உட்பட, வடபிராந்திய படைத்துறை ஆணைப்பீடத்தின் பெரும்பாலான தளபதிகள் கொல்லப்படக் காரணமான அராலித்துறைக் கண்ணிவெடியை, சாதுரியத்துடனும் தீரத்துடனும் சென்று புதைத்ததற்காக, இவருக்கும் பரிசில் வழங்கப் பட்டிருந்தது.

இந்த கட்டைக்காட்டுச் சாதனைக்காகவும் மேஜர் கார்வண்ணன் சிறப்பான முறையில் பணியாற்றியிருந்தார். இந்தச் சண்டையில் காயமடைந்த அவர் பின்னர் 04-10-92 இல் வீரச்சாவடைந்தார்.

கட்டைக்காட்டுச் சாதனையானது, சிங்களப் படைத்துறையின் கட்டளைத் தலைமையகத்தில் தலைகீழ் மாற்றத்தையே ஏற்படுத்த, பிரதான காரணியாக அமைந்துவிட்டது. இத்துடன் அரசின் இராணுவ வேலி பற்றிய நம்பிக்கையும் இப் பெரும் சாதனையுடன் தகர்ந்துவிட்டது. அதேசமயம் இச்சாதனை எமது மக்களின் நம்பிக்கையை அதிகரிக்கச்செய்து, ஒரு உத்வேகத்தையும் ஊட்டியுள்ளது. ❋

## கட்டைக்காட்டில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் படைத் தளபாடங்களும்

★ 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கி – 01
50 கலிபர் மேலதிக சுடுகுழல் – 01
ஆர். சி. எல். 50 கலிபர் ரவைக் கூடுகள் – 04
இதற்குரிய றூல் செற் – 01
★ ஆர். பி. ஜி. – 01
ஆர். பி. ஜி. ஸ்கோப் – 09
ஆர். பி. ஜி. எறிகணைகள் – 188
ஆர். பி. ஜி. புறப்ளர் – 170
★ ஜி. பி. எம். ஜி. – 01
மேலதிக சுடுகுழல் – 01
மவுண்ட் – 01
கிளீனிங் செற் – 01
★ 'மினிமி' ரக எல். எம். ஜி. – 02
மேலதிக சுடுகுழல் – 06
★ 40 எம். எம். கிறனேட் பிஸ்ரல் – 03
அதற்குரிய எறிகணைகள் – 75
★ 60 எம். எம். மோட்டர் (அடித்தளத்துடன்) – 01
அதற்குர்ய ஸ்கோப் – 02
60 எம். எம். எறிகணைகள் – 53
60 எம். எம். வெளிச்ச எறிகணைகள் – 08
★ எவ். என். சி. தானியங்கித் துப்பாக்கிகள் – 180
இதற்குரிய ரவைக் கூடுகள் – 372
இதற்குரிய ஸ்கோப் – 03
இதற்குரிய றைபிள் கிறனேட் – 18
★ ஜி - 3 ரக துப்பாக்கி – 01
இதற்குரிய ரவைக் கூடு – 01
ரி - 56 - 2 ரக துப்பாக்கிகள் – 02
இதற்குரிய ரவைக் கூடுகள் – 45
இதற்குரிய கோல்சர் – 24
★ ரி - 56 – 1 ரக துப்பாக்கிகள் – 03
★ ரி - 81 ரக துப்பாக்கிகள் – 05
★ எஸ். எல். ஆர். – 02
இதற்குரிய ரவைக் கூடுகள் – 05
★ வேட்டைத் துப்பாக்கிகள் – 02
★ சிக்னல் பிஸ்ரல் – 03
★ 81 எம். எம். எறிகணைகள் (பெரியது) – 56
81 எம். எம். எறிகணைகள் (சிறியது) – 83
★ புகைக்குண்டுகள் – 46
★ கைக்குண்டுகள் – 100
★ ஜே. ஆர். கைக்குண்டுகள் – 74
★ கிளைமோர் (பெரியது) – 02
(சிறியது) – 21
★ வயர் றோல் – 09
★ திரிகொளுத்தி – 21
★ பாதுகாப்புத் திரி (றோல்) – 01
★ கோடெக்ஸ் (வெடிஅதிர்வு கடத்தி) றோல் – 06
★ பயனைட் கத்திகள் – 57
★ சாதாரண வெளிச்சக் குண்டுகள் – 23
★ மிதி வெடிகள் – 213
★ தாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகள் – 17
★ அலேட் மைன்ஸ் – 02
★ தொலை தொடர்புச் சாதனம் – 01
★ தொலைநோக்கி – 07
★ மோட்டர் கிளீனிங் செற் – 04
★ கமெரா – 03
★ ரி. வி. – 01
★ தட்டச்சு இயந்திரம் – 01
★ ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் – 12
★ இராணுவ பெல்ட் – 13
★ இராணுவ சப்பாத்துகள் (சோடி) – 108
★ மழை அங்கி – 55
★ கிட்பாக் – 80
★ தலைக் கவசங்கள் – 25
★ தண்ணீர்க் கான் – 50
★ ஜெனரேட்டர் – 03
★ மரம் அரியும் இயந்திரம் – 02
★ உழவு இயந்திரம் – 01
★ பிக்கப் வாகனம் – 01

### ரவைகள்

| | |
|---|---|
| 50 கலிபர் ரவைகள் | 19, 782 |
| ஆர். சி. எல். ஸ்பொட் ரவைகள் | 53 |
| 5. 56 ரவைகள் | 2, 01, 380 |
| 5· 56 ரவைகள் (லிங்குடன்) | 37, 550 |
| நேட்டோ ரவைகள் (லிங்குடன்) | 18, 000 |
| எல் – 3 ரவைகள் (லிங்குடன்) | 9, 800 |
| நடுத்தர ரவைகள் | 9, 375 |
| | 2, 95, 940 |

www.eelamview.com

சிறுகதை

# கடல் மீன்கள்

மாலை வெயில் கடலில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது.

பாதி தரையிலும் மீகுதி கடலிலும் நின்ற படகின், 'கடையாலில்' இருந்து, கரையைப் பார்த்தபடி இருந்தான் டானியல்.

'இண்டைக்கு கொழும்புச் சனம் ஏதோ குறைவுதான். வெயில் பட்டிட்டா ஒரு வேளை சனம் வந்தாலும் வரும். இரவிலதான் வேலை அதிகம்.'

'அணியத்'திற்குள் படுத்திருந்த தம்பி, திரும்பி மறுபக்கமாகப் படுத்தான். 'ராவும் நித்திரையில்லை. அவன் பாவம் படுக்கட்டும்.'

அங்கொன்றும் இங்கொன்றுமாக கடல் நீரேரியில் படகுகள் போவதும் வருவதுமாக இருந்தன. மாலைப் பொழுதுகள் எப்போதும் அழகானவை. கைகளைப் பின்னால் ஊன்றிச் சாய்ந்தவன், வானத்தைப் பார்த்தான். செம்பவள நாரை ஒன்று அவலப்பட்டு தயங்கித் தயங்கி அங்கும் இங்கும் பறந்து...... 'செம்பவள நாரைகள் சோடிபிரியிறேலையாம். இது மட்டும் தனிய...... அம்மாவை மாதிரி......'

இதயத்தில் சட்டென்று வலித்தது. திரும்பிக் கரையைப் பார்த்தான். ஆட்கள் சுமைகளுடன்·

தம்பி எழுந்து முகம் கழுவிக் கொண்டிருந்தான். சோர்விலிருந்து விடுபட அவனால் முடியவில்லை. தம்பிக்கு இவனைவிட இரண்டு வயதுகள் குறைவு. கடைசியாக ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அவன் அப்பாவின் செல்லம். அவனை ஒத்த வயதுப் பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, அவன் அப்பாவின் மடியில் படுத்துக்கிடந்து கதை கேட்டுக் கொண்டிருப்பான்.

இப்போது அதெல்லாம் வெறும் கனவுகள்.

தம்பி விளிம்பில் கால் வைத்து, எட்டித் தரையில் பாய்ந்து வாடியை நோக்கிப் போனான்.

'இண்டைக்கு முழுக்க ஒரு வேலையுமில்லாம இப்பிடியே கிடந்தா என்ன மாதிரி......' மனது புழுங்கியது. நினைவில் அம்மாவும் தங்கச்சிகளும். அவர்களின் ஏக்கம் ததும்பிய முகங்கள். வறுமை எவளவு விரைவாக...... கைகளால் முகத்தை அழுத்தித் துடைத்தான். காலால் படகின் அடிப்பாகத்தை உதைத்து ஆராய்ந்தான். பக்கங்களைப் பார்த்தான்.

காயப்பட்டு, பக்கங்கள் பிளந்து...... அடுத்த வருடத்திற்கு சரிவராது.

"அண்ணை டோய், அடுத்தது எங்கட ரேணாம்."

தம்பி ஓடிவந்து அணியத்தை, அசைத்தான்.

டானியல் கீழே இறங்கினான். காற்சட்டையின் பின்பக்கமாக ஒட்டியிருந்த மணலைத் தட்டினான். பின்பக்கம் தேய்ந்து...... பிய்ந்து...... பள்ளிக்குப் போடுறது. இனி அது தேவைப்படாது.

இவன் 'கடையால்' பக்கம் நின்று தள்ளினான். வெறும் படகு, மெதுவாக அசைந்து புறப்படும் இடத்திற்கு வந்தது.

சில மிதிவண்டிகள், ஆட்கள், அவர்களின் சுமைகள். அளவான பாரம்.

"தம்பி, அக்கரைக்கு எவளவு நேரம் செல்லுமடாப்பா?"

"அப்பு கடல் வத்தீட்டுதணை, கொஞ்சத் தூரம் சேறு. ஆம்பிளையள் இறங்கி நடக்க வேணும். அங்கால பறவாயில்லை. எப்பிடிப் பாத்தாலும் ஒரு மணித்தியாலத்தில போயிடலாம்".

அவர்கள் படகைத் தள்ளினார்கள். படகு மெதுவாக அங்குலமங்குலமாக சேற்றில் அழுத்திக் கோடிட்டுக்கொண்டு முன் சென்றது.

கால்கள் புதைந்தன. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் கடினமாக இருந்தது. சேற்றுக்கு மேல் நின்ற தண்ணீரின் தெளிப்பு நடப்பவர்களை நனைத்தது.

ஆரம்பத்திலேயே தம்பி தவித்தான். நடக்க முடியாமல் துன்பப்பட்டான். நிற்பதும், நிமிர்வதும், பிடிப்பதுமாக...... சிறிது தூரத்தில் அவன் களைத்துப் போனான்.

ஒவ்வொருவராகப்படகில்ஏறினார்கள். தம்பியையும் ஏறச்சொன்னான் டானியல். இறுதியில் அவன் தனியாகத் தள்ளிக்கொண்டு நடந்தான். முழங்கால்கள் முழுவதுமாகச் சேற்றில் புதைந்து வந்தன. இளைத்துக் களைத்தது. காற்தசைகள் இறுகிப் பிடித்தன. வியர்வை அல்லது உப்பு நீர் ... ஏதோ தெரியவில்லை - உடல் முழுவதும் பிசுபிசுத்தது. 'விழுந்து விடுவேனா?' இதயம் தவித்தது.

'இல்லை. ஒவ்வொரு முறையும் இப் பிடித்தானே!'

படகு மெதுவாக மெதுவாக அசைந்தது. நீர்மட்டம் உயர்ந்தது. அவன் தாவி ஏறினான்.

'மரக்கோலை' எடுத்து தட்டுத் தடுமாறி, சேற்றில் அமிழ்த்தி, ஊன்றித் 'தாங்கினான்.'

'அப்பாவெண்டா...... அவரின்ர உயரத்துக்கும் உடம்புக்கும் இப்ப படகு அலைகளை எகிறிப் பாயும்.' அவனுக்கு முகம் வாடியது. அப்பாவின் நினைவு எப்போதும் இப்படித்தான் மனதை நெருடும். பாரமாகஅழுத்தும்; அழவைக்கும்.

காற்று உத்வேகத்துடன் வீசி முகத்தில் அடித்தது. அடிக்கடி தாக்கி நெஞ்சைத் தடவி, விலகிச் சென்றது.

"டேய், காத்து விழுது பாயை விரி."

தம்பி அணியத்திற்குத் தாவினான். மரக்கோலைத் தோளில் சாய்த்துக், குத்தி நிமிர்த்தினான். சுற்றி இருந்த சேலையைக் களைந்து



" இனிக் கரை வந்திடும்."
அவன் கத்தியது கடலெங்கும் கேட்டது.

விரித்து அகலக் கட்டினான். பாய்க்குப் பதிலாக அம்மா தந்தது. இருந்ததுக்குள் காற்றுக்குத் தாக்குப் பிடிக்கக்கூடியதாக, அம்மாவின் கூறைச்சேலை.

காற்று சேலையைத் தள்ளியது. குவியம் போல......டானியல் திரும்பிப் பார்த்தான்.

'அம்மான்ர கலியாணச் சேலை.'

இதயம் படபடவென அடித்தது.

அழுதுவிடுவானா......? அழுவதில் என்ன தவறு......? விழிகளில் கடல் மங்கலாகியது. ☆

கடற்காற்று சாதுவாக வீசியது. அலைகள் கால்களைத் தடவிவிட்டு பின்வாங்கி ஓடின. செபமாலை கடலின் அசைவுகளில் தன்னை மறந்து போய் நின்றான்.

மாலை நேரம். கடல் சீர் போட்டிருந்தது.

'முந்தி எண்டா இப்ப கடலுக்குப் போயிருக்கலாம்.'

ஆழ்ந்த பெருமூச்சுடன் தலையை மேலே உயர்த்திக் கீழே பதித்தான்.

கப்பல் இன்றைக்கும் அதே இடத்தில் கட்டிக் கிடந்தது. அருகே புள்ளியாக படகொன்று அங்குமிங்கும் அலைந்தது.

'கடலுக்கை இறங்கி மாசக்கணக்காகுது வீட்டிலை மனிசி பிள்ளையள் அரைவயிறும் கால்வயிறும். மாதாவே! இன்னும் எத்தினை நாளைக்கு இந்தப் பாடோ'

செபமாலை மனதிற்குள் புழுங்கினான். அந்த வெப்பம் அவனுக்கு மட்டுமல்ல - இந்த மண்ணில் இருக்கிற எல்லாக் கடற்கரைக் கிராமங்களுக்கும் சொந்தமானதுதான்.

கடற்கரையை விட்டு வீட்டுப் பக்கமாக நடந்தான். அவனது படகு வேலி ஓரமாகக் கவிழ்த்து விடப்பட்டிருந்தது. கிட்டவாகப் போனான். நன்றாகப் பார்த்தான். அதிலேயேநிலத்தில் இருந்தான்.

அந்தப் படகுக்கும் அவனுக்கும் தான் எவ்வளவு நெருக்கமான உறவு. கடலுக்கு நடுவில் ..... மீன் பட்டாலும் படாவிட்டாலும் அதோடுதான் அவனது கோபமும் நேசமும்.

முன்னர் எல்லாம் கட்டுமரத்தில் தான் தொழிலுக்குப் போய்க் கொண்டிருந்தான். றோசலினைக் கைப்பிடித்த பிற்பாடு உள்ளதை எல்லாம் 'வித்துச் சுட்டு' தோமஸ் சம்மாட்டியாரிட்ட இருந்து, நல்லாக கடலடிச்ச இந்தப் பிளாஸ்ரிக் படகையும், அதோட எஞ்சின் ஒன்றையும் சேர்த்து வாங்கினான். பதினைந்து வருடம் கண் இமைப்பது போல் கடந்து போனது.

ஒரு தரம் இஞ்சினை மாற்றிவிட்டான். ஆனால் படகை மாற்ற அவனுக்கு மனம் வரவில்லை. அது அவனது உணர்வுகளைப் புரிந்து கொண்ட 'ராசாத்தி'.

'இண்டைக்கு எப்படியேனும் தொழிலுக்கு போவேணும்'

நிமிர்ந்து கடலைப் பார்த்தான். கப்பல் அங்கேயே நினறது. புள்ளியாக நின்ற படகைக் காணவில்லை. 'எங்கட கடல், சின்னன் தொடக்கம் தொழிலுக்குப் போய் வந்த கடல், இப்ப அந்நியமாம்.....'

கோபமாகவும், சினமாகவும் இருந்தது. கடற்கரை நீட்டுக்கும் படகுகளும் கட்டுமரங்களும் கவிழ்ந்து அநாதரவாகக் கிடந்தன.

'வீட்டில பட்டினி எண்டாலும் கடலுக்குப் போக ஏலுதோ? கடவுளே! தொழிலுக்குப் போன எத்தனைபேர் இந்த அறுவாங்களால... கடலோடு கடலாக ... தாயே, மாதாவே! இந்த அநியாயங்களுக்கு முடிவைக் காட்டம்மா.'

வெளிச்சம் மங்கிக் கொண்டு வந்தது.

திண்ணையில் றோசலின் எதையோ பறிகொடுத்தவள் போல் இருந்தாள். அவளால்தான் என்ன செய்யமுடியும். பசிக்கு அழும் குழந்தைகளுக்கு ஆறுதல் வார்த்தைகளை எங்கு தேட முடியும்? கடன் ... கடவுளே! தருவதற்கு வசதியாக அந்தக் கடற்கரைக் கிராமத்தில் யார் இருக்கிறார்கள்?

வீட்டிற்குள் போன செபமாலை வலைகளைத் தூக்கித் தோள்களில் போட்டான். றோசலின் திகைத்துப் போய்ப் பார்த்தாள். தொழிலுக்குப் போகேக்கை தடை சொல்லக் கூடாது. அது வழமை.

"மரியண்ணையிட்ட ரெண்டு போத்தல் மண்ணெண்ணை வாங்கினனான். ஆழிக்குப் போகாம பக்கத்தில வலைபடுத்திட்டு நேரத்துக்கு வந்திடுவன்".

அவன் றோசலினைப் பார்க்கவில்லை. அவளின் கண்களைப் பார்க்க அவன் விரும்பவில்லை. ஆனால்...... பார்க்க வேண்டும் போலவும் இருந்தது. நிமிர்ந்து பார்த்தான். கண்களில் ஆயிரம் வார்த்தைகள். இறங்கி வேகமாக நடந்தான்.

இருளோடு இருளாக படகு அலைகளில் தவழ்ந்து முன்னேறியது; மறைந்து போனது. அம்மாவுடன் டானியலும் கரையில் நின்றான். அம்மா மாதா கோயிலைப் பார்த்து நெஞ்சில் சிலுவையிட்டாள். இருளை வெறித்தபடி நீண்டநேரம் நின்றாள்.

இரவு அம்மா விழித்தே இருந்தாள். அலைகளின் ஒவ்வொரு உதைப்பும் இதயத்தில் விழுந்தது.

அவள் எப்போதும் இப்படித்தான். அப்பாவைக் கடலுக்கு அனுப்பிவிட்டு விழித்திருந்து தவிப்பாள். விடியும் முன்பு கடற்கரைக்கு ஓடுவாள். செவ்வானத்தினூடே படகுகள் கரையைத் தேடி வரும். அப்பாவைத் தேடுவாள். அலைகளுக்கு நடுவில் அப்பாவின் படகு...... அதன் பின்பு மகிழ்ச்சியில்...

அந்த இரவு பயங்கரமானதாக இருந்தது; நீண்டு ...விடியமறுத்தது.

ஒரு நிலையில், இரவின் அமைதியைப் பிளந்துகொண்டு வெடிச்சத்தங்கள். அம்மா எழுந்தாள்; கரைக்கு ஓடினாள். அமைதி. அலைகளின் அடிப்பு. வேறு எதுவுமே இல்லை.

தவித்தாள். இருளுக்குள் கடலை அலசினாள், கண்ணீர் அழுகையுடன் வழிந்தது.'அவர் கடலுக்குப் போய்ட்டா அழக்கூடாதாம்.' கண்களைத் துடைத்தாள். திரும்பவும் கண்ணீர்.

வானம் வெளுத்தது. நன்றாக விடிந்தது.அப்பாவைக்காணவில்லை. அவளும் பிள்ளைகளும் கரையில் கடலை அலசியபடி...... தொலைவில்...... மிகத் தொலைவில்..... யேசுவே! நேற்று நின்ற கப்பலைக் கூடக் காணவில்லை.

டானியல் கடற்கரை நீட்டுக்கு ஓடினான்; நடந்தான்.

'தாயே, மாதாவே அப்பாவுக்கு ஏதும் நடந்திடக் கூடாது.'

அவன் தொடர்ந்து ஓடினான்; நடந்தான். முடிவில் களைத்து விழுந்தான்.

பொழுது சாய்ந்தது. இருண்டது. அம்மா கரையிலேயே இருந்தாள். விழி மூடவில்லை. பேசவில்லை.

விடிந்தது.

"மேற்கில செபமாலையின்ர உடல் கரையொதுங்கி இருக்காம்."

அம்மா கதறினாள். தலையிலடித்தடித்து ஓலமிட்டாள். அப்படியே கரையோரமாக ஓடினாள். அலைகள் தூர விலகின. காற்று நின்றது. துயரம் நிறைந்த கதறல் உலகை நிறைத்தது.

அப்பாவைச் சூழ்ந்து மக்கள் கூடினர்.

வேறொரு முனையில் அப்பாவின் இரத்தத்தோடு படகும் கரைஒதுங்கியது. ☆

இருள் கவிந்திருந்தது. பாதி வளர்ந்திருந்த நிலவு முகிலுக்குள் மறைந்து மறைந்து விளையாடியது.

(9ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

## கடல் மீன்கள்.,..

( 8 ஆம் பக்கத் தொடர்ச்சி )

எதிராக வந்த படகுகள் சில, நிழலாகக் கடந்தன. இருளின் ஊடே படகை மெதுவாகத் தடவினான். அப்பாவின் இறுதிக் கணங்கள், அந்த நேரத்து உணர்வுகள், அவலங்கள், எல்லாமே...... இதுக்குத்தான் தெரியும்.

தம்பி அருகாக கைகளைக் குறுக்காகக் கட்டிக்கொண்டு குளிருக்குக் குடங்கிக் கொண்டிருந்தான்.

'இந்தக் கடல் வத்தோட இவனைப் பள்ளிக்கனுப்ப வேணும்.'

மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான்.

"தம்பி டேய், இன்னும் கனதூரமே போவேணும் ?"

"இல்லை அண்ணை, ஒரு பிட்டி வரும்! அதைக் கடந்திட்டா அங்கால கரைதான்."

படகு முழுவதும் ஓர் நிம்மதிப் பெருமூச்சு; மகிழ்ச்சிக் கலகலப்பு.

'இண்டைக்கு முழுமைக்கும் இதுதான் உழைப்பு. எனி உங்கால எப்ப ரேண் கிடைக்கப் போவுதோ.

அவனுக்குள் ஏக்கப் பெருமூச்சு.

'இன்னும் பதினைஞ்சிருபது நாள், இங்க உழைக்கலாம். பிறகு கடல் வத்தீட்டா என்ன பாடோ தெரியேலை.'

காற்றோடு சோகம் ஒன்று வந்து நெஞ்சில் உதைத்தது.

படகு தரையில் தட்டி நின்றது. தண்ணீருக்குள் பாய்ந்தான். தள்ளினான். அசையவில்லை. பின்பக்கமாகத் திரும்பினான். கைகளை புறவழமாகப் பிடித்துப் பலங்கொண்ட மட்டில் அசைத்தான்; அசைந்தது. அவனால் முடியும்- அவன் போன்ற உறுதி உள்ளவர்களால், இந்த உலகத்தையே அசைக்க முடியும்.

படகு பிட்டியைத் தாண்டியது. பாய்ந்து ஏறினான். சேலை உள்வாங்கிய காற்று, படகை வேகமாக இழுத்தது. தம்பி அணியத்துக்குப் போனான்.

"இனிக் கரை வந்திடும்."

அவன் கடலெங்கும் கேட்கும்படி கத்தினான். ※

## லெப். கேணல் சுபன்.....

( 4ஆம் பக்கத் தொடர்ச்சி )

( 30. 3. 92 ) நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல்கள் புகழ்பெற்ற தாக்குதல்களாகும்.

வஞ்சியன் குளத்தில் 60இற்கும் மேற்பட்ட படையினரும். வேப்பங்குளத்தில் 24 படையினரும் கொல்லப்பட்டனர். இவற்றில் இருந்து முறையே 50 இற்கும் 30 இற்கும் மேற்பட்ட ஆயுதங்கள் எடுக்கப்பட்டன.

தமிழீழத்தில் மிகப் பெரிய அளவில் காவல் உலா வந்த படையினர் மீது அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டு, அப்படை அணிமுற்றாக அழிக்கப்பட்ட நிகழ்ச்சி வஞ்சியன் குளத் தாக்குதல் ஆகும்.

" வங்காலை இறங்கு துறையில் வந்து அடிப்பம் (9.10 90) என்று எதிர்பார்த்திருக்க மாட்டாங்க. அங்கு தாக்கிவிட்டு இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுள் வெளியேற வேண்டும். அத்தாக்குதலில் 6 படையினர் கொல்லப்பட்டனர் "

பூநகரி தாக்குதல் பற்றி (25 - 09 - 92) நினைச்சுக் கூடப் பார்த்திருக்கமாட்டாங்க. 2½ மைல் இராணுவ வேலியை அழித்து, 62 காவலரண்களைத் தகர்த்தோம். 25 படையினர் கொல்லப்பட்டாங்க. 30 இற்கு மேல் ஆயுதங்களை கைபற்றினோம். அநிலைதான்...... ஆள் காயப்பட்டுவிட்டது என்றுதான் சொன்னாங்க. உடம்பைத்தான் கொண்டுவந்தாங்க.

எந்தத் தாக்குதல் எண்டாலும் கடைசி வேவுக்கு சுபன் வரும். வந்து பார்த்து யார் யார் எங்கு நிலை எடுக்க வேண்டும், என்ன என்ன செய்ய வேண்டும் என்று சொல்லும்.

அதன் பிறகுதான் தாக்குதல் நடக்கும். ஆள் பக்கத்திலே நிற்குது எண்டாலே ஒரே உற்சாகமாக இருக்கும்.

" அண்ணே, செய்ய முடியாது என்று ஒன்றும் இல்லை " என்று சுபன் அடிக்கடி சொல்லும்.

சுபனின் அகரமுதலியில் 'முடியாது என்று ஒன்று இல்லை.' ※

## செப்ரெம்பர் 26 முதல் ஒக்ரோபர் 25 வரையான 30 நாட்களில்

★ 101 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர்.

★ 249 ஆயுதங்களும், 3 லட்சத்துக்கும் மேலான ரவைகளும், ஏராளமான வெடிப் பொருட்களும், படைத் தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

★ *55 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.*

★ 01- 10- 92 அன்று யாழ். கட்டைக்காட்டில் நடத்தப்பட்ட மிகப் பெரிய ஒரு தாக்குதலில் மினி முகாம் ஒன்று தகர்க்கப்பட்டதுடன், 3 கி. மீ. நீள இராணுவ வேலியும் சிதைக்கப்பட்டது. இம் முகாமிலிருந்த ஆயுதக்கிடங்கிலிருந்து 200 ற்கும்மேற்பட்ட ஆயுதங்கள்,ஏறக்குறைய 3 லட்சம்ரவைகள்,படைத் தளபாடங்கள்,மற்றும் இரு வாகனங்களை நாம் கைப்பற்றினோம். இது ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாகும்.

## மாவீரர்களின் வரலாறுகள் நூலுருவில்

இதுவரை வெளிவந்த,

'விடுதலைப் புலிகள்' ஏடுகளில் உள்ளடக்கியிருந்த மாவீரர் நினைவுக் கட்டுரைகளின் தொகுப்பான 'போராளிகளின் குருதிச் சுவடுகள்' என்ற நூலும், இதுவரை வெளிவந்த, எமது இயக்கத்தின் மகளிர் பிரிவினரின் ஏடான 'சுதந்திரப் பறவைகள்' இதழ்களில் உள்ளடங்கியிருந்த மாவீரர் நினைவுக் கட்டுரைகளின் தொகுப்பான 'சுதந்திரத்தை தேடி' என்ற நூலும், ஈழநாதம் வாரமஞ்சரிகளில் உள்ளடங்கியிருந்த மாவீரர்களின் நினைவுக் கட்டுரைகளின் தொகுப்பான 'விழுதுகள்' என்ற நூலும், 1992ஆம் ஆண்டின் மாவீரர் நாளை முன்னிட்டு எமது இயக்கத்தின் மாவீரர் பணிமனையால் வெளியிடப்படுகின்றன.

# ஆனையிறவுப் பாதை....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களத் தளபதிகள் அஞ்சுகின்றனர்.

இந்தநிலையில் வெற்றிலைக்கேணி -ஆனையிறவு இராணுவ வேலியை அகற்ற வேண்டிய கட்டாயம், சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு எழுந்துள்ளது.

ஆனால் இந்த இராணுவ வேலி அமைக்கப்பட்ட தன் நோக்கங்களை அடையாமல் (குடாநாட்டைக் கைப்பற்றுவது) இராணுவ வேலியை அகற்றினால், அது சிங்களப் படையின் இயலாமையை அப்பட்டமாக வெளிப்படுத்திவிடும் என, அரசும் அஞ்சுகின்றது.

இராணுவ வேலி அகற்றப்படுவதற்கும் ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கும் என்ன தொடர்பு என்றொரு கேள்வி, எழலாம்.

இந்த இராணுவ வேலியூடாகத்தான் ஆனையிறவுத் தளத்திலுள்ள சுமார் 2000 படையினரது தேவைகள் சென்றடைகின்றன. உணவு சமைப்பதற்கான விறகுகள்உட்படஎல்லாப் பொருட்களும், ஆயுததளபாடங்களும், இவ்வேலியூடாகவே அனுப்பப்படுகின்றன.

இந்த இராணுவ வேலிஇல்லாவிடின், அனைத்து விநியோகங்களும் வான்வழி மூலம்தான் நடைபெற வேண்டும். ஆனால் இது சாத்தியமில்லை. ஏனெனில் முன்னர் 800 பேருடன் ஆனையிறவுத் தளம் இருந்த போதே, வான்வழி விநியோகங்களை மேற்கொள்ள சிறீலங்கா அரசு, பெரும் பொருட் செலவைச்செய்ததுடன், பெருஞ்சிரமத்தையும்சந்தித்தது. ஆனால், இப்போது ஆனையிறவுத் தளம் விஸ்தரிக்கப்பட்டு 2000பேரைக் கொண்டிருக்கின்றது. இப்பெருந்தொகையினரின் தேவைகளை வான்வழி மூலம் நிறைவேற்றும் சக்தி, சிறீலங்கா வான்படைக்கு இல்லை.

அப்படியானால் ஆனையிறவுத் தளத்தின் ஆட்பலத்தை வெகுவாகக் குறைக்க வேண்டும். ஆட்பலக்குறைப்பென்பது தளத்தின் அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும் என்பது, அனைவருக்கும் நன்கு தெரியும்.

ஆகவே சிறீலங்கா அரசைப் பொறுத்தளவில், வெற்றிலைக்கேணி - ஆனையிறவு இராணுவ வேலியை அகற்றவும் வேண்டும்; அதே சமயம் ஆனையிறவுத்தளத்தைத் தொடர்ந்து வைத்திருக்கவும் வேண்டும். அத்துடன்தான் ஒரு இராணுவத் தோல்வியைச் சந்தித்ததாக வெளிப்படையாகக்காட்டவும்கூடாது.

இந்த விருப்புகளை ஒரே எத்தனிப்பில் அடையும் நோக்குடனேயே சிங்கள அரசு, இந்த "பாதைதிறப்பு"என்ற தந்திரோபாய நாடகத்தை அரங்கேற்றி, ஒரு நெருக்கடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முனைகிறது.

புலிகளின் சம்மதத்துடன் ஆனையிறவுப் பாதையைத் திறந்துவிட்டால், ஆனையிறவுத் தளத்தைச் சூழபாதுகாப்பு பகுதி என இணக்கம் கண்டுவிட்டால்,

1. வெற்றிலைக்கேணி - ஆனையிறவு இராணுவ வேலியை அகற்றுவதற்கு சிறீலங்கா அரசுக்கு ஒரு சாட்டும்,அதற்குரிய நியாயங்களும் கிடைத்துவிடும்.
2. ஆனையிறவுத்தளமும்புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து விடுபட்டு விடும்; எனவே குறைந்த படையினருடன் தளத்தைப் பராமரிக்கலாம்
3. வேண்டியபொருட்களைத் தரைப் பாதையூடாகச் செல்லும் வாகனங்களிலிருந்து இறக்கிக் கொள்ளலாம்.
4. அகற்றப்படும் இராணுவ வேலியிலிருந்து கிடைக்கும் படையினரைப் பயன்படுத்தி,பலாலித்தளத்தை மேலும் விஸ்தரித்து,குடாநாட்டில் மேலும் நிலங்களை ஆக்கிரமிக்கலாம்.
5. தருணம் வரும்போது போக்குவரத்து வாகனங்களையே பாவித்தும், பிரயாணிகளைக் கேடயமாகப் பயன்படுத்தியும், குடாநாட்டிற்குள் சுலபமாகப் படைகொண்டு நுழையலாம்.

ஆனையிறவுப் பாதை திறப்பு பற்றிய அரசின் அறிவித்தலின் பின்னால் உள்ள தந்திரோபாய அரசியலை, எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இத்தந்திரோபாய நகர்வைத் தோற்கடித்து சிங்கள அரசிற்கு ஒரு இராணுவ நெருக்கடியைக் கொடுத்து, குடாநாட்டு மக்களைச் சிங்களப் படையெடுப்பிலிருந்துபாதுகாப்பதற்காகத்தான், ஆனையிறவுப் பாதையைத் திறக்க நாம் சம்மதம் தெரிவிக்கவில்லை.

பூநகரி, கொம்படி, ஊரியான் ஊடான பாதைகள் சிங்களப் படைகளினால் தடுக்கப்பட்ட பின்னர் குடாநாட்டு மக்கள் படும் தாங்கொணாத் துன்பங்களை, நாம் நன்கு அறிவோம்.

ஆனாலும், இதுவரை நாளும் எமது போராட்டத்தை வளர்ப்பதற்காக எம்முடன் சேர்ந்து எமது மக்கள் சுமந்த துன்பப் பளுவை இன்னும் சிறிது காலத்திற்கு ஏற்று, நிரந்தர நன்மைகளையும் - மகிழ்ச்சிகளையும் அனுபவிப்போம். ※

www.eelamview.com

# ஏன் இந்த மாற்றம்

ஆறுமாத காலத்தில் மீண்டுமொருமுறை தனது படைத்துறைக் கட்டளைமையத்தில் சிறீலங்கா அரசு, ஒரு மாற்றத்தைச் செய்துள்ளது.

அதாவது, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோரிடம் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் அனைத்தும் மீளப்பெறப்பட்டு, ஆறு மாதத்திற்கு முன் இருந்ததைப் போலவே மீண்டும் ஜெனரல் கமில்டன் வணசிங்காவின் தலைமையிலான கூட்டுப் படைத் தலைமையகத்திடம் (J. O. C.), கொடுக்கப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் தெரிந்ததைப்போலவே இத்தலைகீழ் மாற்றத்திற்குக் காரணம், இக் குறுகியகாலத்தில் சிங்களப் படைகள் சந்தித்த பெருந்தொகை உயிரிழப்புகளும் – ஆயுத இழப்புகளும்தான். இதனால் படையினரின் போரிடும் உறுதி சிதைந்து வருவதுடன், ஆயிரக்கணக்கானோர் படையை விட்டோடியுமுள்ளனர்.

இந்த ஆறு மாதகாலத்தில் ஏறக்குறைய 800 படையினர். கொல்லப்பட்டுள்ளனர். 750 இற்கும்மேற்பட்ட ஆயுதங்களை இழந்துள்ளனர். இதில் சுமார் 100 இலகு இயந்திரத்துப்பாக்கிகளும் மற்றும் எறிகணை செலுத்திகள் போன்ற பாரிய ஆயுதங்களும் அடங்கும். இவை தவிர சுமார் 4½ இலட்சம் ரவைகளும் பெருந்தொகையான வெடிப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தக் காலப் பகுதியில்தான் சிங்களப் படைகள் இராட்சத 'வை 8' (அன்ரனோ 8) ரக வானூர்தியை இழந்தன; அதிவேக நீருந்து விசைப் படகு ஒன்றை இழந்தன. [மண்டைதீவிலிருந்து எந்தவித சேதமுமில்லாது இப்படகைக் கைப்பற்றியிருந்தோம்.] ஒரு இராணுவ முகாமையும் (வண்ணாங்குளம்); சில மினிமுகாம்களையும் இழந்தன. பெருந்தொகையான – ஆயுத வெடி மருந்துகளுடன் ஒரு ஆயுதக் கிடங்கைப் பறிகொடுத்தன.

வடதமிழீழப்போரின் சூத்திரதாரிகளும் – சிங்களப் போர் வானின் நம்பிக்கை நட்சத்திரங்களுமான, அதி உயர் தளபதிகளை இழந்தன. இவ்வாறாகப் பல இராணுவத் தோல்விகளைச் சிங்களப் படைகள் சந்தித்தன.

கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி இக் கூட்டுப்பாதுகாப்புப் படை போரைப்பொறுப்பெடுத்த பின், தமிழீழமெங்கும் கிடுகிடுவென இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. கவச வாகனங்கள், தாங்கிகளுடன் படையினர் தமிழர் நிலங்களில் நகர்ந்து, அகலக் கால்வைத்தனர். இதற்கு "படையினரின் முன்னேற்ற"மென சிங்கள தேசத்தில் அர்த்தம் கற்பிக்கப்பட்டது.

"மூன்று மாதத்தில் புலிகளை அழித்துவிடுவேன்" என மார்தட்டினார், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன.

சிங்களப்பத்திரிகைகளும், சிங்கள அரசியல்வாதிகளும் ஜெனரல் சிசில் வைத்தியரத்னவைப் புகழ்ந்தனர்.

வட தமிழீழத்தில் சிங்களப் படைகள் முன்னோக்கி நகர்ந்து, முற்றுகைவலைகளையும் இராணுவ வேலிகளையும் அமைத்தபோது "சிங்களச் சிங்கங்கள் வெற்றிவாகை சூடுகின்றன" என்று கொழும்பு பெருமையில் திளைத்தது.

ஆனால், நாட்செல்லச் செல்ல முற்றுகைவலைகளுக்குள்ளும், இராணுவ வேலிகள் மீதும் புலிகள் கறையான்களைப் போலப் புகுந்து அரிக்கத் தொடங்கிய பின்னர்தான், படையினர் சுந்தித்திருந்த இராணுவ நெருக்கடி கொழும்புக்குத் தெரியத் தொடங்கியது.

இந்த இராணுவ நெருக்கடியை இராணுவ வழிமுறைகள் மூலம் தீர்க்கமுடியாது என்பதும் அரசிற்குத் தெரியும்.

இருந்தபொழுதிலும், தனது இராணுவ இயலாமையை ஒப்புக்கொண்டு, இராணுவ அணுகு முறைகளை நிறுத்தி, இனப் பிரச்சினைக்கு அரசியல் வழி முறைகள்மூலம் தீர்வுகாணவும் அரசு தயாராகஇல்லை.

எனவே தான், இந்த இராணுவத் தோல்விகளுக்குரிய பொறுப்பை, போரை வழிநடாத்திய படைத்துறை ஆணைப் பீடத்தின் மீது சுமத்தி (முப்படைத் தளபதிகளையும், காவல்துறை மா அதிபரையும் கொண்ட 'கூட்டுப் பாதுகாப்புப் படை' மீது) இதற்குரிய நடவடிக்கையையும் உடனடியாக எடுத்து (ஜெனரல் ஹமில்ட்டன் தலைமையிலான 'கூட்டுப் படைத் தலைமை'யிடம் போரை வழி நடத்தும் பொறுப்பை மாற்றி) பிரச்சனையிலிருந்து தான் தப்பிக்கொள்ள - விலகிக்கொள்ள சிங்கள அரசு முயல்கின்றது.

அதேசமயம், இராணுவ வழிமுறைமூலமே இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதென்ற தனது கொள்கையை தொடர்ந்தும்நடை முறைப்படுத்தவே அரசு முயல்கின்றது. அதற்குஏதுவாக புதிய திட்டங்களைத்தீட்டவும், புதியதந்திரோபாயங்களை வகுத்து புதிய வேகத்தில் போரைத் தொடர்வதற்கும் வசதியாக, படைத்துறைத் தலைமையில் மாற்றம் செய்து கொடுத்திருக்கின்றது.

இந்த மாற்றங்கள் சிங்கள அரசு எதிர்பார்ப்பதற்கு மாறாக, பாரிய சிக்கல்களையும் தோற்றுவிக்க வாய்ப்புண்டு.

இத்திடீர் மாற்றத்தினால் முப்படைகளின் தளபதிகளும் அதிர்ச்சியுற்று, அதிருப்தி அடைந்து காணப்படுகின்றார்கள் என, கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

சிங்களப் படைகளின் பிரதம தளபதியும், சிறீலங்காவின் ஜனாதிபதியுமான திரு. பிரேமதாசா அவர்கள், முப்படைத் தளபதிகளையும் அழைத்து இம்மாற்றத்தை அறிவித்த பொழுது, விமானப்படைத் தளபதி எயர்வைஸ்மார்சல்ரெறன்ஸ் குணவர்த்தனா அவர்கள் குத்தலாகக் கேட்ட கேள்வியொன்றுக்கு, திரு. பிரேமதாசா அவர்கள் சூடாகப் பதிலளித்ததாக 11. 10. 92 அன்றைய 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் எழுதப்பட்டுள்ளது.

இவ்விதம் சிங்கள உயர் தளபதிகளிடம் ஏற்பட்டுள்ள அதிருப்திகள் காரணமாக, இராணுவக் கட்டுப்பாடுகள் - ஒழுக்கங்கள் பாரிய சிதைவைச் சந்திக்கும் என்பது திண்ணம்.

கட்டளைகள் ஏற்கப்படாது உதாசீனம் செய்யப்படலாம். ஒத்துழைப்புக்கள் வழங்கப்படாது தட்டிக்கழிக்கப்படலாம். இதனால் தொடர்ந்தும், போர் முனையில் சிங்களப் படைகள் தோல்விகளைச் சந்திக்கலாம். அத்துடன் அரசுக்கும் படைத்துறைத் தலைமையின் தளபதிகளுக்குமிடையே விரிசல்கள் அதிகரிக்கலாம். இது ஆட்சிக் கவிழ்ப்பு வரையும் நீண்டு செல்லலாம்.

இவை ஒருபுறமிருக்க, இக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்ததைப் போல, கடந்த ஆறுமாதகாலத்திலும் 800 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 750 இற்கும் மேற்பட்ட ஆயுதங்களும் சுமார் 4½ இலட்சம் ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதே போன்றே முன்னரும் ஜெனரல் கமில்டன் வணசிங்கவின் கூட்டுப்படைத் தலைமையகத்தின் இறுதி ஆறுமாதமும், அதற்குச் சோதனை மிகுந்ததாகவே இருந்தது.

அந்தக் காலப்பகுதியில் எமது இயக்கம் நடைமுறைப்படுத்திய புதிய போருபாயத்தின் விளைவாக, படையினர் பெரும் இழப்புக்களையே சந்தித்திருந்தனர். அந்த ஆறுமாதகாலத்திலும் 600 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 400 ற்கும் அதிகமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ரவைகளும்பெருந்தொகையில் வெடிப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

புலிகளுடனான போரை கூட்டுப்படைத் தலைமையகம் நடாத்தினாலும் சரி, கூட்டுப் பாதுகாப்புப்படைத் தலைமையகம் நடாத்தினாலும் சரி, சிங்களப் படையின் இழப்புகள் வர வர அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

கடந்த ஒருவருட காலமாக, மாதாந்தம் 100 இற்கும் மேற்பட்ட படையினர் என்ற விகிதத்தில், உயிரிழந்து வருகின்றனர்.

இவை குறிப்பாக எதைக் காட்டுகின்றதென்றால், சிங்கள அரசு இராணுவ வழிமுறைகள் மூலம் தமிழர் போராட்டத்தை அழிக்கமுடியாது என்பதுடன், தமிழர்களின் ஆயுதப் போராட்டம் படிப்படியாக வளர்ந்து செல்கின்றது என்பதையே ஆகும். ❋

***இராணுவத் தோல்விகளுக்குரிய பொறுப்பை, போரை வழிநடத்தும் படைத்துறைத் தலைமைமீது சுமத்தி, அதற்குரிய நடவடிக்கையையும் எடுத்து, அதிலிருந்து தான் தப்பிக்கொள்ளவே சிங்கள அரசு முயல்கின்றது. மாறாக, தனது இராணுவ இயலாமையை ஒப்புக்கொண்டு; இராணுவ அணுகுமுறைகளை நிறுத்தி, இனப்பிரச்சனைக்கு அரசியல் வழிமுறைகள் மூலம் தீர்வுகாண அது தயாராக இல்லை.***

**சிங்களப் படைகளின் முற்றுகைவலைகள் மீதும், இராணுவ வேலிகள் மீதும், புலிகள், கறையான்களைப் போலப் புகுந்து அரிக்கத்துவங்கிய போதுதான், தனது படையினர் சந்திக்கின்ற நெருக்கடி கொழும்புக்குத் தெரியவந்தது.**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.eelamview.com

# பதவிநிலைப் பட்டிகள் (சிறிலங்காப் படைகளினுடையது)
## BADGES OF RANK

### அதிகாரமுள்ள மேலாளர்கள் ‹Commissioned Officers›

#### தரைப்படை [ARMY]



ஜெனரல் General | லெப்ரினன்ட் ஜெனரல் Lieutenant General | மேஜர் ஜெனரல் Major General | பிரிகேடியர் Brigadier | கேணல் Colonel | லெப்ரினன்ட் கேணல் Lieutenant Colonel | மேஜர் Major | கப்டன் Captain | லெப்ரினன்ட் Lieutenant | இரண்டாவது லெப்ரினன்ட் 2nd Lieutenant


#### கடற்படை [NAVY]



அட்மிரல் Admiral | வைஸ் அட்மிரல் Vice Admiral | றியர் அட்மிரல் Rear Admiral | கொமடோர் Commodore | கப்டன் Captain | கொமாண்டர் Commander | லெப்ரினன்ட் கொமாண்டர் Lieutenant Commander | லெப்ரினன்ட் Lieutenant | உதவி லெப்ரினன்ட் Sub Lieutenant



#### வான்படை [AIR FORCE]



எயர் சீவ் மார்சல் Air Chief Marshal | எயர் மார்சல் Air Marshal | எயர் வைஸ் மார்சல் Air Vice Marshal | எயர் கொமடோர் Air Commodore | குறூப் கப்டன் Group Captain | விங் கொமாண்டர் Wing Commander | ஸ்குவாடன் லீடர் Squadron Leader | பிளைட் லெப்ரினன்ட் Flight Lieutenant | பிளைங் ஓவ்வீசர் Flying Officer | பைலட் ஓவ்வீசர் Pilot Officer

### அதிகாரமற்ற மேலாளர்கள் ‹Warrant and Non Commissioned Officers›

#### தரைப்படை [ARMY]




றெஜிமென்ரல் சார்ஜன்ட்மேஜர் Regimental Sergeant Major | சார்ஜன்ட் மேஜர் Sergeant Major | ஸ்ராவ் சார்ஜன்ட் Staff Sergeant | சார்ஜன்ட் Sergeant | கோப்ரல் Corporal | லான்ஸ் கோப்ரல் Lance Corporal

#### கடற்படை [NAVY]



மாஸ்ரர் சீவ் பெற்றி ஓவ்வீசர் Master Chief Petty Officer | பிளீட் சீவ் பெற்றி ஓவ்வீசர் Fleet Chief Petty Officer | சீவ் பெற்றி ஓவ்வீசர் Chief Petty Officer | பெற்றி ஓவ்வீசர் Petty Officer | லீடிங் சீமன் Leading Seaman

#### வான்படை [AIR FORCE]



வொறன்ற் ஓவ்வீசர் Warrant Officer | பிளைட் சார்ஜன்ட் Flight Sergeant | சார்ஜன்ட் Sergeant | கோப்ரல் Corporal

www.eelamview.com